சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2005, சித்திரை 15உ. (28-4-74) ஞாயிறு ஏப்ரல் 28 ரபி: ஆகி 5 - புத்தகம் 27 இதழ்-35


## இது கேள்விப்பத்திரமல்ல —கேலிப்பத்திரம்!

இ. போ. ச: பஸ் வண்டிகளில் இடப்படும் சேரிடங்களைக் குறிக்கும் பெயர்ப் பலகைகளில் உள்ள தமிழ் எழுத்துக்களை வாசிக்கத் தொலை நோக்கிக் கண்ணாடிகளையும், பூதக் கண்ணாடிகளையும் உற்பத்தி செய்து இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு உற்பத்தியாளர்கள், விநியோகத்தர்கள் உடனே தேவை.

அரசு நிறுவனங்களிலிருந்தும், தமிழ் இன மொழிப் பற்றற்றவர்களிடமிருந்தும் எக்காரணங்களைக் கொண்டும் எவ்வித விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

—ஆய்வாளர், பெயர் பலகைகள் கிளை, தமிழ் ஆராய்ச்சி நிலைவம், யாழ்ப்பாணம்.

தகவல்—ச. மு.

# ‘தாக்கப்படும் இனங்களுக்கு கைகொடுத்து உதவுங்கள்!’

## இலண்டன் மாநாட்டில் உடுவில் பா. உ. எழுப்பிய பிரச்சினை!

“பல தேசிய இனங்கள் வாழும் ஒரு நாட்டில் சிறுபான்மைத்தேசிய இனங்கள், அந்த நாட்டின் பாராளுமன்றத்திடமிருந்து நீதியைப்பெற்றுக்கொள்ள முடியாத சூழ் நிலையில் கிளர்ச்சிகளில் ஈடுபட்டால் — அந்த நாட்டிலுள்ள பாராளுமன்றம் அழிகின்ற ஒரு நிலையே ஏற்படும். காமன்வெல்த் பாராளுமன்ற கழகமாகிய உங்கள் கழகத்தின் அடிப்படை நோக்கங்களில் ஒன்று—அங்கத்துவ நாடுகளில் உள்ள பாராளுமன்றத்தைப் பாதுகாத்தல் என்பதாகும். எனவே சிறுபான்மைத்தேசிய இனங்களின் கிளர்ச்சிகளின் காரணமாக பாராளுமன்றம் அழிந்துபோகாமல் காப்பதற்காக—தாக்கப்படும்சிறுபான்மை தேசியஇனங்கள் தமக்கு அந்நாட்டில்இழைக்கப்படும் அநீதிகள் பற்றி உங்களுக்குவிண்ணப்பித்தால், நீங்கள் ஒருமத்தியட்சசபையை அமைத்து அம்மத்தியட்ச சபையின் தீர்ப்பின் மூலம் அப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவ முடியுமா? அல்லது அப்படிப்பட்ட பிரச்சினைகளை ஏனைய காமன்வெல்த் நாடுகளின் உதவியோடு ஐ. நா. சபைக்கு கொண்டு செல்ல முடியுமா? இது நாள்வரை இப்படிப்பட்ட விஷயங்களில் ஈடுபடாவிட்டாலும் இனியாவது ஈடுபடுங்கள் !”

—இவ்வாறு இலண்டனில் நடைபெற்ற சர்வதேச காமன்வெல்த் பாராளுமன்ற கழக மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய உடுவில் பா. உ. வி. தர்மலிங்கம் உரிமைமுழக்கம் எழுப்பினுர்.

இலண்டனில் நடைபெற்ற இம்மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு, அங்கிருந்து சென்னைக்கு சென்ற பின் திரு. தர்மலிங்கம் அண்மையில் ஈழம் திரும்பினுர்.

இலண்டன் கருத்தரங்கில், எந்த ஒரு விடயத்தைப்பற்றியும் ஒரு பிரதிநிதி பேசிய பின்னர், அவர் பேசிய விடயத்தையொட்டி ஏனைய பிரதிநிதிகள் கேள்வி எழுப்பவும், முடிவில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பேசியவர் பதிலளிக்கவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இதன் படி, காமன்வெல்த் பாராளுமன்ற கழகம் பற்றியும் அதன் பணிகள் பற்றியும் மேற்படி கழகத்தின் பொதுச் செயலாளர் பேசிய பின்னர் அப்பேச்சையொட்டிப் பிரதிநிதிகள் தங்கள் கேள்விகளைக்கேட்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டபோதே மேற்கண்ட பிரச்சினையை திரு. தர்மலிங்கம் எழுப்பினுர். திரு. தர்மலிங்கம் இதையொட்டிப் பேசியதாவது:-

1964ல் காமன்வெல்த் பாராளுமன்றக் கழக மாநாடு நடைபெற்றபோது நிகழ்ச்சி நிரலில் இல்லாமலேயே, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளினதும் வற்புறுத்தலின் காரணமாக அந்த மாநாட்டில் காஷ்மீர் பிரச்சினை விவாதிக்கப்பட்டிருக்கிறது.

காமன்வெல்த் பாராளுமன்றக் கழகத்தில் தென்னுபிரிக்காவும், தெற்கு ரொடீசியாவும் உறுப்பு நாடுகளாக இருந்தபோதே அந்த இரு நாடுகளும் கறுப்பர்களுக்கு எதிராக பின்பற்றும் இன ஒதுக்கல், நிறத் துவேஷம் போன்றகொள்கைகள் பற்றி பாராளுமன்றக் கழக மாநாட்டில் இதற்கு முன்னர் விவாதிக்கப்பட்டிருக்கிறது.

‘இவ்வாண்டு செப்டம்பரில் கொழும்பு மாநகரில் காமன்வெல்த் பாராளுமன்றக் கழகத்தின் மாநாடு நடைபெறவிருக்கிறது. நிகழ்ச்சி நிரலில் இல்லாவிட்டாலும் — நான் முன்னர் சுட்டிக்காட்டியது போன்று — இதுபோன்ற பிரச்சினைகளை திடீரென்று விவாதிப்பதற்கு ஏதாவது வழி முறைகளை வகுத்து வைத்திருக்கிறீர்களா?’

—இவ்வாறு திரு. தர்மலிங்கம் கேட்ட கேள்விக்கு, கழகப் பொதுச் செயலாளர் பதிலளிக்கையில், ‘திரு. தர்மலிங்கம் சுட்டிக்காட்டியதுபோன்று, மேற்கண்ட பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டது உண்மைதான் ஆனல் இப்படியான பிரச்சினைகளை விவாதிப்பதற்கு நாங்கள் ஊக்கம்கொடுப்பதில்லை. சாதாரணமாக உறுப்பு நாடுகள் அனுப்பும் தீர்மானங்களையே விவாதிப்போம்’ என்று தெரிவித்தார்.

இதன் பின் திரு. தர்மலிங்கம் பின்வருமாறு தமது இரண்டாவது கேள்வியை கேட்டார்:-

‘உங்களுடைய பேச்சில், காமன்வெல்த் பாராளுமன்ற கழகத்தின் முக்கிய நோக்கம், காமன்வெல்த் நாடுகளிலுள்ள பாராளுமன்றங்களை தகுந்த விதத்தில் இயங்குவதற்கு உதவுவதும் அவற்றைக் காப்பாற்றுவதும் என்று கூறினீர்கள்.

‘பல தேசிய இனங்கள் வாழும் ஒரு நாட்டில், சிறுபான்மைத்தேசிய இனங்கள் அந்த நாட்டின் பாராளுமன்றத்திடமிருந்து நீதி பெற முடியாமல் கிளர்ச்சி

(5-ம் பக்கம் பார்க்க)



படுகொலை செய்யப்பட்ட சிலி நாட்டுப் பிரதமர் திரு. அலன்டேயின் துணைவியார் திருமதி அலண்டே அண்மையில் சென்னைக்கு வருகை தந்த போது—சென்னையில் அப்போது தங்கியிருந்த உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் ஈழத்தமிழர்களின் சார்பில் அவருக்கு மலர்ச் செண்டு கொடுத்து வரவேற்ருர்.

## ‘தனிக் கட்சி சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது’

“பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியன நடத்துவதற்கு தடை விதித்தும், சுயாதீனப் பத்திரிகை நிறுவனத்துக்கு ‘சீல்’ வைத்தும், கடந்த 20ம் திகதி அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் அரசியல் சட்டத்திற்கு எதிரானவை. சட்ட விரோதமானவை. ஜனநாயகத்திற்கு முரண்பட்டவை.”

—இவ்வாறு எதிர்க்கட்சிகளின் கூட்டுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளின் சார்பில், எதிர்க்கட்சித் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தன பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள அவசரத் தந்தியொன்றில், பிரதமரால் பிறப்பிக்கப்பட்டுள்ள ஜனநாயக விரோத, சட்ட விரோத, அரசியல் சட்டத்திற்கு முரணுன அவசர காலக் கட்டளைகள், எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகளை தடுத்துவிட்டு, தனிக்கட்சி ஆட்சியை உருவாக்கி, சர்வாதிகாரத்திற்கு வழி கோலியுள்ளன” என்று குறிப்பிட்டுள்ளார்.

## உங்கள் அமைச்சும் தமிழைப் புறக்கணிக்கிறது!

### பிரதமருக்குப் பண்டிதர் கடிதம்!

பிரதமரது திட்டமிடல் பொருளாதார அலுவல்கள் அமைச்சும் தொடர்ந்து தமிழை புறக்கணித்து வருவதாக திருமதி சிறிமா பண்டார நாயகாவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் காவலூர் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் குற்றம் சாட்டியுள்ளார்.

பண்டிதர் இது சம்பந்தமாக எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

‘உங்கள் திட்டமிடல் பொருளாதார அலுவல்கள் அமைச்சு தொடர்ந்து தமிழைப் புறக்கணிப்பது மிகவும் கவலைக்குரியது. உங்கள் பொறுப்பிலுள்ள அமைச்சே திறைசேரிச் சுற்றறிக்கை 760க்கு முரணுகத் தமிழைப் புறக்கணிக்கிறதெனின் ஏனைய அமைச்சுக்கள் தமிழைப் புறக்கணிப்பது பெரும் விந்தையன்று. ‘தமிழுக்கும் உரிய இடம் கொடுக்கிறோம்’ என்று உங்கள் அரசாங்கம் சொல்லுகின்றதேயன்றி; அதைச் செயற்படுத்தவில்லை என்பதற்கு உங்களுக்கு எவ்வளவு சான்றுகள் தேவைப்பட்டாலும் என்னுல் கொடுக்க முடியும்.

உங்கள் பொறுப்பிலுள்ள குடிசனமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம், பொலிசுத் திணைக்களம், தேசியதிட்டப் பிரிவு முதலியன எவ்வாறு தமிழைப்புறக்கணிக்கின்றன என்பதை முன்னர் உங்கள் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளேன்.

உங்கள் திட்டமிடல் பொருளாதார அமைச்சில் உள்ள பிரதேச திட்டமிடல் பகுதி எங்களுக்கு அனுப்பிய

(5-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# மேனி சிலிர்க்க வைக்கும் 'மே' நாள் வரலாறு!

மே முதல் நாள்—பாரெங்கும் புகழ் மணங்கொண்ட பாட்டாளிகள் வெற்றிக் களிப்போடு — புன்னகை தவழும் முகத்தோடு இன்புற்றிருக்கும் இன்பத் திருநாள்!

தொழிலாளப் பெருங்குடி மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, வெற்றிக் குதூகலத்தோடு — தம் உற்றார் உறவினரோடு — இல்லக் கிழத்தியோடு — மழலைச் செல்வங்களோடு உண்டு களித்து — உவகை பொங்க தாம்பூலம் தரித்து, பொங்கும் பூரிப்பிலே இன்பமடைந்திடும் இனிய நாள்!

இற்றைக்கு சுமார் இரு நூற்றுண்டுகளுக்கு முன்னர், முதலாளிகளின் கோரப் பிடியிலே சிக்குண்டு, தவித்த பாட்டாளிப் பெருந்தகையோர் நாளொன்றிற்கு பன்னிரெண்டு, பதிமூன்று மணி நேர வேலை செய்தும், உரிய சம்பளத்தைப் பெற முடியாது—வறுமைப் பிடியிலே வாடி வதங்கி — உண்பதற்கும், உடுப்பதற்கும்கூட முதலாளிகளின் 'சுருங்கிய' கைகளையே எதிர்நோக்க வேண்டியிருந்தது!

'இடம் கிடைப்பின் மடம் பிடுங்கும்' இருதலைக் கொள்ளிகளான பணத்திமிர் படைத்த பணக்கார வர்க்கமோ, ஏழ்மையையும் வறுமையையும் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு பாட்டாளிகளின் வேலைக்கு மட்டுமன்றி, உடலுக்கும் உயிருக்கும்கூட விலை பேசி அவர்களை ஆட்டிப் படைத்தனர்!

இத்தகைய ஆட்டிப்படைக்கும் ஆள்வோரின் கொடுமைகளைச் சகிக்கவொண்ணு தொழிலாளர் வர்க்கம், பொங்கி எழுந்தது!

செய்யும் கடமைக்கு உரிய வேதனம் சரியாகக் கிடைக்காத பட்சத்தில், செய்யும் தொழிலுக்குரிய 'நேர காலம்' முறையாக கவனிக்கப்படாத பட்சத்தில், கிடைக்கவேண்டிய உரிமைகளை 'சலுகையோடு' பெற முடியாத பட்சத்தில்—

முதலாளிமாரின் சட்டத்தையும், திட்டத்தையும் — அவர்தம் கொட்டத்தையும் அடக்கி — அவர்களின் அதிகார வெறிக்கோர் சாவு மணி அடித்தேனும் தத்தம் உரிமைகளை — சலுகைகளை தயக்கமின்றி பெற்று விடுவதென முடிவு செய்தனர்!

கினிகத்தெனை

எஸ். ஆர். ராஜா

அவர்கள் செய்த முடிவை கேள்விப்பட்ட முதலாளி வர்க்கம் பணத்தை வாரியிறைத்து பொலிசாரை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டது. இதனால் வெறிகொண்ட பொலிசார் பாட்டாளிகளை சுற்றி வளைத்து தாக்கியும், பலரை படுகாயப் படுத்தியும், நூற்றுக் கணக்கானோரை துப்பாக்கிக்கு இரையாக்கியும் தமது வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டிருந்தது:

இந்த அநியாயமான, அட்டகாசமான செயல்களைத் தம் கண்களால்காணச் சகிக்காத உழைப்பாளர்கள் அனைவரும் ஒன்றுபட்டனர்: ஓரணியில் திரண்டனர்!

இதன் நிமித்தமாக 1886-ம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி அமெரிக்கா "சிக்காகோ" நகரில் கூடி தங்களது அப்போதைய நிலைமைபற்றி விவாதித்தனர்!

இவர்களின் நீண்ட நேர விவாதத்தின் பின்னர் — "மார்க்ஸ்" என்ற தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் போராட்டம் நடத்த தீர்மானித்தனர்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது மட்டுமல்ல — அதனைச் செயலிலேயும் செய்து காட்டினர்!

ஆம்! "ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்" என்ற பொன்மொழிப்படி— முதலாளிமாரின் சட்டமும், கொட்டமும்எட்டவிரட்டப் பட்டது!

"எட்டு மணி நேர" வேலைத்திட்டம் சட்டமாகியது. அதுமட்டுமல்ல, பாட்டாளிகளின் தேவைக்கேற்ப அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய அனைத்துரிமையையும் தவறாது கொடுப்பதாக "பணத்திமிர்" படைத்த முதலாளித்துவம் ஒப்புக் கொண்டது!

முதலாளித்துவத்தின் அதிகார வெறியின் பின்னணியில் — பாட்டாளிகள் பொங்கியெழுந்து போராட்டம் நடத்திய பொன்னுள் தான் இன்று மாநிலம்போற்றும் மே தினம்!

இரத்தக்கறை படிந்த இந்த அராஜகத்தின் விளைவு தான் மே தினத்தை ஒரு இலட்சிய நாளாக்கிற்று!

போராட்டத்தின் விளைவால் மாண்ட—தூக்கிலிடப்பட்ட, சிறையில் வாடி வதங்கிய அனைவருக்கும் ஒன்றுசேர்ந்து எல்லோரும் மரியாதை செலுத்தினர்.

அன்று முதல்தான் இந்த மேதினம் வரலாற்றிலே இடம் பெற்று மறக்க முடியாத பொன்னுளாக — சரித்திரத்திலேயே தனக்கோர் ஒப்பற்ற இடத்தை வகுத்துக் கொண்டு கடர்விட்டுப் பிரகாசிக்கின்றது!

இந்த முதலாவது போராட்ட விளைவையொட்டித் தான் 1889ம் ஆண்டு பாரீஸ் மாநகரத்திலே தொழிலாளர்களின் வெற்றித் திருநாளாகிய இரண்டாவது விடுதலை நிறைவு விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்ட இந்த உன்னத திருநாளன்றுதான் மேற்படி தொழிலாளரின் விடுதலை நந்நாளான 'மே' முதல் நாள் நாடெங்கும், நகரமெங்கும் ஏன்? பாரெங்கினும் கூட வருடந்தோறும் பாட்டாளிகளின் விடுதலை தினமாக — தொழிலாளரின் உரிமை நாளாகக் கொண்டாடப்பட வேண்டுமென தீர்மானிக்கப் பட்டது.

அன்று முதல் இன்று வரை மேதின விழா நாடெங்கும், நகரெங்கும் தடைப்படாது கொண்டாடப்பட்டுவருவது பாரறிந்த உண்மையாகும்!

இதன் நிமித்தம் இந்த வெற்றித்திருநாள்—

சர்வதேச அடிப்படையில் தொழிலாளர் விடுதலை தினமாகக் கொண்டாடப்பட வேண்டுமென்ற சட்டம் அமுலாக்கப்பட்டது.

இந்த புனிதத் திருநாளன்று, எமக்குக் கிடைக்க வேண்டிய அனைத்துரிமைகளையும் தவறுதுபெற, ஒற்றுமையுணர்வோடு — உணர்ச்சிப் பெருக்கோடு பாடுபடுவோமென்றும், அனைத்துரிமைகளையும் நிச்சயம் பெற்றே தீருவோமெனவும் திடசங்கற்பம் கொள்வோமாக!

1886ம் ஆண்டு மே மாதம் 1ம் திகதி நடக்கப்பெற்ற போராட்ட நந்நாளை இன்று எம் அகக்கண் முன்னே நோக்குமிடத்தே—

எம் மேனி சிலிர்க்கின்றதன்றோ!

## 'மே' நாள்!

—தாமரைத் திவான்

தொழிலினை ஆள்பவர்கள்
　　தொழிலாளர்! ஆனுல் எந்தத்
தொழில் என வரையறுத்துச்
　　சொன்னவர் எவருமில்லை!
தொழில் எனில் தேவையான
　　தொழில் எலாம் தொழில்தான் அன்றி
தொழிலிலே உயர்வு தாழ்வு
　　சொல்பவர் தூய்மை அற்றோர்!

ஒரு தொழில் உயர்ந்ததென்றும்,
　　ஒரு தொழில் தாழ்ந்ததென்றும்,
ஒரு தொழில் புனிதம் என்றும்,
　　ஒரு தொழில் புன்மை என்றும்,
கருவினில் இருந்தே உள்ளக்
　　கருத்தினில் பதிய வைத்து
வருபவர் தொழிலை வாழ்த்தி
　　வணங்கிடார்—வாழமாட்டார்!

திங்கள் வைகாசி ஒன்று
　　சிரித்திடும் தொழிலாளர் நாள்!
எங்குமே எவரும் நன்றாய்
　　எழுதுவார்—பேசுவார்கள்!
இங்கிது முடிய நாட்டில்
　　இருந்திடும் பழைய பாடம்?
பொங்குது உள்ளம் ஆனுல்...
　　பொறுமைதான்...வழிவேறில்லை!

துணியினை வெளுக்கும் தோழன்!
　　சுருள்மயிர் நறுக்கும் தோழன்!
அணிதெருக்கூட்டும் தோழன்!
　　அரிய மீன்பிடிக்கும் தோழன்!
பணி எனப் பறை அடிப்போன்!
　　பலமரம் ஏறும் தோழன்!
மணிகளாய் இவர்கள் ஒன்றாய்
　　மாலையில் தெரி நாள் "மே" நாள்!

# தமிழினத்தைத் தட்டியெழுப்பிய பாவேந்தர் பாரதிதாசன்

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களது பிறந்த நாள் மே 29 ஆகும். அதையொட்டி கவஞர் நினைவாக இக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது. — ஆர்

எஸ். பி. கே.

தமிழினம் எழுச்சிபெற புரட்சிப் பாதையைக் காட்டிய பாவலன் பாரதிதாசன் நினைவுநாள் இன்று.

தமிழ் இனம் ஏன் தாழ்ந்தது? சிந்தனையாளர் பலர் விடைபெற விளைந்தனராயினும், பாரதிதாசனைப் போல், பகுத்தறிந்து தன் கருத்தைத் அஞ்சாது எடுத்துரைத்துப் புரட்சிக் கவிஞனென்று புகழ்படைத்தவன் வேறு யாருமிலர்.

ஆரிய மதக்கொள்கைகளுக்கு — கட்டுப்பாடுகளுக்கு — ஆரிய ஏடுகளுக்கு புராண இதிகாசங்களுக்கு— தலைவணங்கிடத் தொடங்கிய பின்னர்தான் தமிழினத்தின் ஒற்றுமை குலைந்தது: தமிழினம் தாழ்ந்தது; தமிழ் நாடுகளில் அந்நியராட்சி தலையெடுத்தது— தமிழன் உள்ளத்தால், உடலால், பிறர்க்கடிமையான 'வரலாறு' இதுதான் என்றுணர்ந்த பாரதிதாசன், விடுதலைக் குரல் எழுப்பும் இலட்சோபலட்சம் தமிழர்களுக்காக, பாட்டால் புரட்சி செய்தான்: தமிழினம் அடிமையான காரணத்தைப் பாடினுன். விடுதலைக்கான வழியைப் பாடினுன். சுதந்திரம் பெற்றதும் எவ்வாறு வாழவேண்டுமென்று பாடினுன்.

தமிழினத்தின் ஒற்றுமையைக் குலைத்த ஆரிய புராணங்களையும், சாதியைப் புகுத்தி தமிழ்ச் சமுதாயத்தை சீரழித்த இதிகாசங்களையும் சாடினுன்.

"பேதம் வளர்க்கும் பெரும் பெரும் புராணங்கள் —சாதிச் சண்டை வளர்க்கத்தக்க இதிகாசங்க"ளாலும்

'உள்ள பகுத்தறிவுக் கொள்வாத' ஏடுகளாலும் தமிழினம் சரண்டப்பட்டது: ஒற்றுமை குலைந்தது; தாழ்ந்தது என்றுரைத்தான்.

ஆரிய மதக்கோட்பாடுகளில் வருத்துன்றி, 'விதி' யென்றும் 'கதி' யென்றும், சொர்க்கம் என்றும், நரகம் என்றும், கண்மூடி அடிமையாகிவிட்ட தமிழ் மக்களுக்கு பாரதிதாசன் சொல்வது கசப்பான உண்மையாகத் தான் தோன்றும்;

மதத்தின் பெயரால், மதவாதிகளின் பெயரால் கடவுளின் பெயரால் 'அவன்' கையாட்கள், 'எல்லாம் அவன் செயலே என்று பிறர் பொருளை வெல்லம்போல் அள்ளி விழுங்கும்' நிலையைக் கண்டு 'காப்பார் கடவுள் உமைக்கட்டையில் நீர் போகுமட்டும் வேர்ப்பீர் உழைப்பீர் என உரைக்கும்' வீணரையும்,

'பண்ணவேண்டும் பூசை
　　யென்பார்
பாலும் தேனும் வேண்டு
　　மென்பார்
என்ணவேண்டும் சாமி
　　யென்பார்
உளத்தில் அன்பு
　　வேண்டாத'

வஞ்சகரையும், ஒறுத்துப் புரட்சிசெய்தவன் பாரதிதாசன்.

தமிழா நீ ஒற்றுமை கொள்; அப்போது உன் பகைவர் ஓடி ஒழிந்திடுவர் என்றுரைத்த பாவலன், தமிழ் எங்கள் வளம்; தமிழ் எங்கள் வாழ்வு; அந்த வளமான வாழ்விற்கு இன்னல் விளைப்போரை சங்காரம் செய்வேன் என்று சங்கெடுத்து முழங்கினுன். அத்தோடு அமைதியடையவில்லைப் பாவலன்.

தருக்கினுற் பிறதேசத்தார்
தமிழன்பால்—என்—
　　நாட்டான்பால்
வெறுப்புறும் குற்றம்
　　செய்தா
ராதலால் விரைந்
　　தன்னுரை
நொருக்கினுர் முது
　　கெலும்பை
தமிழர்கள் என்ற சேதி
குறித்த சொல் கேட்டின்
　　பத்தின்
குதிக்கு நாள் எந்த
　　நாளோ,"

என்று ஏங்கினுன். இன்று ஒவ்வொரு தமிழனுக்குமிருக்கவேண்டிய ஏக்கம் தான் இது—

தமிழ்த்தாய்கலங்குகிறுள். அவள் கண்ணீரைத் துடைக்க இனியும் தாமதிக்காதே என்று எம்மைத் தட்டிவிட வந்த கவிஞன்.

...உனது தாய் மிக
உயிர்வதை யடைகிருள்
உதவாதினி ஒரு தாமதம்
உடனே விழி தமிழா'
என்ருன்;



(6-ம் பக்கம் பார்க்க)




"உலகத் தமிழ் மாநாட்டு நினைவாக ஈழத்து தமிழ் நாளேடுகள் 'மலர்' ஏதும் வெளியிடவில்லையா? ஏன் வெளியிடவில்லை?'

— இந்தியாவிலிருந்து மாநாட்டுக்கு வந்திருந்த இரா. கணேசன், புலவர் இராசு, கொடுமுடி சண்முகம் போன்ற தமிழகத்துப் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு என்னிடம் திருப்பித் திருப்பிக் கேட்ட போது எனக்கு என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை.

காரணம் பதில் சொல்லத் தெரியாததால் அல்ல—ஈழத்துப் பத்திரிகைகளின் வெட்கங்கெட்ட — துரோகத்தனமான செயல்களை ஒரு பத்திரிகைக்காரனான நானே அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய நிலைக்கு ஆளாகிவிட்டேனே என்பதால் சற்று வெட்கமடைந்தேன் — அவ்வளவுதான்!

"ஈழத்து தமிழ் நாளேடுகள்—சிங்களப் பிரதமரான பண்டாரநாயகா நினைவாக மலர் வெளியிடும்; டி. எஸ். சேனநாயகா நினைவாக மலர் வெளியிடும்; பௌத்த வெசாக் பண்டிகையையொட்டிக்கூட மலர் வெளியிடும்; ஆனால் தமிழ் மொழிக்காக உலகம் தழுவிய ஓர் மாபெரும் மாநாடு நடைபெறும் போது மட்டும் ஏன் மலர் வெளியிடவில்லை? தமிழை எழுதி, தமிழ் மக்களிடையே தங்கள் ஏடுகளை



விமான நிலையத்தில் வைத்து பலவந்தமாகத் திருப்பி இலண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஆராய்ச்சி அறிஞர் கோ. தில்லைநாயகம். இவர் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவாவின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

விற்பனையாக்கி — அதனால் வயிறு கழுவி வரும் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் தமிழ் மாநாட்டு நினைவாக மலர் வெளியிட்டல்லவா இருக்க வேண்டும் என்று நீங்கள் கேட்கின்ற கேள்வி நியாயமானதுதான். ஆனால் மாநாட்டையே நடத்த விடாமல் குழப்பிட அல்லும் பகலும் அனவரதமும் திட்டமிட்டு ஈழத்து தமிழ் நாளேடுகள் நடத்தி வந்த தொடர்ச்சியான பிரச்சாரத்தைப் பற்றி நீங்கள் அறிந்து கொண்டீர்களானால் "மலர்" பற்றிய கேள்வியே கேட்டிருக்கமாட்டீர்கள்!" என்று அவர்களுக்குப் பதில் சொல்லிவைத்தேன்!

ஆம், ஈழத்து நாளேடுகள் அனைத்தும் நான்காவது உலகத் தமிழ் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல்— குழப்பியடிக்கும் நோக்குடன் நாடோறும் செய்துவிட்ட நச்சுப் பிரச்சாரங்கள்தாம் எத்தனை எத்தனை! குறிப்பாக கலாநிதி வித்தியானந்தன் அவர்கள் தலைமையேற்று மாநாட்டை யாழ்ப்பாணத்திலேயே என்ன வந்தாலும் நடத்தியே முடிப்பது என்ற உறுதியுடன் செயற்படவாரம்பித்த நாளிலிருந்து, மாநாட்டை முறியடிப்பதற்கு அரசுடன் சேர்ந்து கொண்டு எவ்வளவு கேவலமான பிரசாரங்களையெல்லாம் ஈழத்து நாளேடுகள் நடத்தியிருக்கின்றன என்பது ஈழத் தமிழ் மக்கள் நன்கறிந்த சங்கதியாகும்:

மாநாடு நடக்குமா நடக்காதா என்ற ஐயத்தையும் திகிலையும் மக்களுக்கு ஏற்படுத்தும் விதத்திலும், நடைபெறப்போவது அனைத்துலகம் தழுவிய மாநாடு அல்ல; சாதாரண தமிழ் விழாத்தான் என்ற பொய்யான போலி மயக்கத்தை மக்களுக்கு ஏற்படுத்தும் விதத்திலும் — மாநாட்டுக்கு எதிரான கற்பனைச் செய்திகளை இட்டுக்கட்டி தயாரித்து திட்டமிட்டு வெளியிட்டும் மாநாட்டு எதிர்ப்பாளர்கள் கொடுக்கும் அறிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டும் தமிழ் நாளேடுகள்—ஏன் ஆங்கில நாளேடுகளும் கூட நாடோறும் ஆடிவிட்ட சதிராட்டங்களை— துரோக ஆட்டங்களை இன்று நினைக்கும் போதும் ஒவ்வொரு தமிழனின் இரத்தமும் நிச்சயம் கொதித்தே தீரும்—அவன் அசல் தமிழனாக இருந்தால்!

அரசாங்க ஊதுகுழல்களாக வெளிவரும் 'டெயிலி நியூஸ்' 'தினகரன்' போன்ற பத்திரிகைகள் மட்டுமன்றி— (இப்போது தடை செய்யப்பட்டுவிட்ட) அரசை எதிர்க்கும் பத்திரிகை என்று கூறப்படும் குணசேன நிறுவன ஏடுகளான தினபதி, சிந்தாமணி போன்ற ஏடுகளும், தமிழர் நலன் பேணுவதாக கூறிக்கொள்ளும் ஈழநாடு, வீரகேசரி போன்ற ஏடுகளும் தமிழ் மாநாட்டுக்கு எதிராக நஞ்சு கக்குவதில் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டே இயங்கின என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் நான்காவது உலகத் தமிழ் மாநாட்டுக்கு பின்னால் அரசியல் வாதிகள் இருக்கிறார்கள்; தமிழர் கூட்டணியினர் நிற்கிறார்கள் என்று சேற்றைவாரி இறைத்து பிரசாரம் செய்து மாநாட்டுக்கு அரசின் ஆதரவு கிடைக்காமல் செய்வதற்கு இந்த நாளேடுகள் தான் காரணமாக இருந்தனவா! அல்லது மாநாட்டுக்கு எதிராக நஞ்சு கக்கும்படி அரசுதான் இந்த ஏடுகளைப் பணித்ததா என்பதே கேள்வி!

கொடி அசைந்ததும் காற்று வந்ததா — காற்று



கொடுமுடி சண்முகம்

வந்ததால் கொடி அசைந்ததா என்பது தெரியவில்லை.

எப்படியிருந்தாலும், சிங்கள அரசும், அரசின் விருப்பு வெறுப்புகளுக்கு அமைய தாளம்போட்டுவரும் ஈழத்து ஏடுகளும், அரசுக்கு வால் பிடித்து வயிறு கழுவி வரும் அடிமைத் தமிழர்களும் தமிழுக்கு எதிராக கொடூர எதிர்ப்பைக் கொட்டினார்கள் என்பது வரலாறு குறித்து வைத்துக்கொண்டுள்ள உண்மையாகும்.

தமிழாராய்ச்சி மாநாட்டில் அதன் நிறுவனரான தனிநாயக அடிகளாரே கலந்துகொள்ள மாட்டார் என்று செய்தி வெளியிட்டது தினபதி. அடிகளார் யாழ்ப்பாணத்தில் இருந்து மாநாட்டு அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்த போதே — அடிகளார் வெளிநாட்டில் இருப்பதாகவும் அவர் மாநாட்டின் போது கூட ஈழம் திரும்ப மாட்டாரென்றும் பச்சைப் பொய்ச் செய்திகளை தந்து மக்களை வேண்டுமென்றே குழப்பத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தது தினபதி.

புதுடெல்லியிலிருந்து டாக்டர் சாலை இளந்திரையன் அவர்களும் மாநாட்

**கோவை-மகேசன்**

டுக்கு வரமாட்டார் என்று இந்தப் பத்திரிகை எழுதி தனக்குத்தானே திருப்திப்பட்டுக் கொண்டது. நண்பர் சாலை இளந்திரையன் மாநாட்டுக்கு வந்திருந்த நேரத்தில் இச்செய்தி பற்றி அவரிடம் நான் பிரஸ்தாபித்த போது—"என் மீது தினபதி ஆசிரியருக்கு அவ்வளவு தூரம் அன்பு" என்று அவர் நகைச்சுவையுடன் தெரிவித்தார்.

'தினபதி' அத்துடன் திருப்தியடையாது — மாநாடு

என்பதை தமிழ் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

ஏரிக்கரை 'டெயிலி நியூஸ்' தமிழ் மக்களுக்கு எதிராக நீண்டகாலமாக கக்கி வரும் நஞ்சை நாம் அறிவோம்! அப்படிப்பட்ட 'டெயிலி நியூஸ்' ஏடு — உலகத்தமிழ் மாநாட்டில் மட்டும் ஏனோ அதிக 'சிரத்தை' யெடுத்து வரிந்து கட்டிக்கொண்டு — மாநாட்டை கொழும்பில் நடத்தும்படி மாநாட்டு அமைப்பாளர்களுக்கு அரச சார்பில் இலவச ஆலோசனை வழங்க முன்வந்தது.

இத்தனை வசதி படைத்த பென்னம்பெரிய நாளேடுகள் அனைத்தும் உலகத்தமிழ் மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து — அதைக் குழப்பிட சதிகள் புரிந்துவந்த நேரத்திலே—சுதந்திரன் பத்திரிகை ஒன்று மட்டுமே வெளிவெளியாக மாநாட்டுக்கு ஆதரவு கொடுத்து வந்ததுடன் — மாநாட்டைக் குழப்பியடிக்க முயலும் தமிழ் விரோதசக்திகளுக்கு சாட்டையடி கொடுத்தும் வந்தது என்பதை நான் இங்கு குறிப்பிடுவது தற்புகழ்ச்சி கருதியல்ல — வருங்கால தமிழ் சமுதாயமும் அறிய வேண்டுமென்பதற்காகவே!

சூரியர், மாநாட்டுக்கு விடுக்கப்பட்ட அழைப்பிதழையே திருப்பி அனுப்பி தன்முகத்தில் தானே கரிபூசிக்கொண்டார்.

ஆளுங்கட்சியின் மற்றோர் அடிமையாகிய நல்லூர் பா. உ. திரு. சி. அருளம்பலம்— மாநாட்டுக்கு வரவிருக்கும் வெளிநாட்டுப் பேரறிஞர்களுக்கு 'விசா' வழங்க வேண்டாமென்றும், மாநாட்டையே தடைசெய்யுமாறும் அரசிடம் மண்டியிட்டுக் கேட்டார்;

வட்டுக்கோட்டை ஆ. தியாகராசா, உலகத்தமிழ் மாநாடு—ஈழத்தமிழர்களின் பிரிவினை மாநாடு என்றும்— தமிழர் கூட்டணியே இதன் பின்னணியில் நிற்கிறது என்றும் 'பனித்'தனமாக அறிக்கை விடுத்தார்;



விமான நிலையத்தில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டும் தமிழுக்காக மீண்டும் திரும்பி வந்து மாநாட்டில் கலந்துகொண்ட அறிஞர் சிம்மன்.

மாநாட்டுக்கு முழு ஆதரவு தந்திருக்கவேண்டிய யாழ் மாநகரசபை முதல்வர் அல்பிரட் துரையப்பாவும் அவரது குழுவினரும், 'யாழ்ப்பாணத்தில் நடைபெறும் உலகத்தமிழ் மாநாட்டுக்கு யாழ் மாநகரசபை மின்சாரக் கட்டண வசதிகள் செய்து கொடுப்பதோடு, 10,000 ரூபா நன்கொடையும்

## 12. பத்தாவது ஆண்டில் ஏற்பட்ட தத்துக்கள்
## (ii) புறப்பகை

தொடங்குவதற்கு இரண்டு நாட்கள் முன்னரும், முன்பக்கத்தில் எப்பொழுதோ எடுத்து வைத்திருந்த றிம்மர் மண்டபத்தின் புகைப்படத்தை முன் பக்கத்தில் போட்டு — இந்த மண்டபத்தில்தான் உலகத்தமிழ் மாநாடு நடைபெறப் போகிறதென்றும், மண்டப வாசலில் இரண்டு தெருநாய்களே காணப்படுகின்றன என்றும் 'குறிப்பு' போட்டுத்தான் யாரென்பதை வெளிச்சம் போட்டுக் காட்டிற்று.

தினகரன் பத்திரிகையோ— திடீர் திடீரென காளான் கழகங்களை உண்டாக்கி, அக்கழகங்களின் பெயரால் மாநாட்டுக்கு எதிராகப் பல்வேறு விதமான அபாண்டங்களை சமைத்துவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. கிழக்கு மாகாணம் ஒதுக்கப்பட்டுள்ளதென்றும் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனரென்றும் 'குழறுபடி' செய்வதில் அது நாடோறும் மும்முரமாக ஈடுபட்டுவந்தது.

வீரகேசரியோ, குமார சூரியர் மாநாட்டுக்கு எதிராக விடுத்த அறிக்கைக்குச் சப்பைக்கட்டுக்கட்டி, ஆசிரியத்தலையங்கம் தீட்டி மாநாட்டுக்கு எதிராக ஒன்றுக்கு இரண்டு தடவை வசைபாடி குமார சூரியரை குளிர வைத்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற உலகத்தமிழ் மாநாட்டுக்கு முழு மூச்சுடன் ஆதரவு தந்திருக்க வேண்டிய யாழ்ப்பாண நாளேடான ஈழநாடு கூட, 1973 டிசெம்பர் மத்திவரை மாநாட்டுக்கு எதிராகவே கருத்துத் தெரிவித்துவந்தது

"தமிழர் மேன்மை அழிப்பாரைப் போற்றுதற்கும் ஏடு பல வாழ்ந்தால் அவற்றை எதிர்ப்பதன்றோ தமிழர்களின் எழுதுகோல் வேலை?"

என்ற பாவேந்தரின் கட்டளையையே சுதந்திரன் மூலம் அன்று முதல் இன்று வரை நான் நிறைவேற்றி வந்திருக்கிறேன் தொடர்ந்தும் நிறைவேற்றி வருவேன் என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.



இரா. கணேசன்

அரசாங்க ஆதரவு நாளேடுகளும் — அரசாங்கத்துக்கு அஞ்சிய நாளேடுகளும் — இவ்வாறு உலகத் தமிழ் மாநாட்டுக்கு எதிராக கொடிய விஷத்தைக் கொட்டின என்றால், சிங்கள அரசுக்கு சேவகம் செய்து சிந்து பாடிவரும் அடிவருடித் தமிழர்கள் மேலும் ஒரு படி சென்று தமிழ் மாநாட்டையே தடைசெய்யும்படி கோரினார்கள்.

கொழும்பில் மாநாட்டை நடத்தி— அரசாங்கம் தமிழுக்கு அள்ளிக்கொடுத்துவிட்டதென அரசியற் பிரசாரம் நடத்துவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்க மாநாட்டுக் குழு அடியோடு மறுத்துவிட்டதனால் — தபாலமைச்சர் செல்லையா குமார

வழங்கவேண்டும்' என்று மாநகர சபை உறுப்பினர் தம்பு அந்தையா கொண்டு வந்த பிரேரணையை சபையில் சமர்ப்பிப்பதற்கே அனுமதி மறுத்துத் தமிழ்த் தாய்க்குத் துரோகம் புரிந்தனர்.

தொட்டதற்கெல்லாம் 'மண்வாசனை' பேசும் 'முற்போக்கு' எழுத்தாளர்கள்— தமிழ்க் கலாசார வாசனை வீசும் யாழ்ப்பாணத்தில் சாதாரண கீழ் மட்டத்திலுள்ள தமிழ் மக்களும் பங்கு பற்றக்கூடிய முறையில் உலகத் தமிழ் மாநாடு நடப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பரிதாபத்தையும் இங்கு கண்டோம். முற்போக்காளர்கள் என்று கூறப்படும் சில கலாநிதிகளை மாநாட்டு கல்வி ஆய்வுக்குழுவினர் புறக்கணித்து விட்டனர் என்பது அவர்களின் வாதம்.

ஆனால்—மாநாட்டு கல்வி ஆய்வுக்குழுவினர் யாரையும் புறக்கணிக்கவில்லை — சிலர் தாமாக வேண்டும் என்றே மாநாட்டைப் புறக்கணித்துள்ளனர் என்பது, பேராசிரியர் வித்தியானந்தனின் பின்வரும் கூற்றால் அறியலாம்.—

"ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிப்பது பற்றிச் செய்தித் தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டது. பிற நாடுகளிலிருந்து முன்பே பதிவு செய்தவர்களுக்கும் இறுதி அறிக்கைகள் அனுப்பப்பட்டன. குறிப்பாக மதுரை, சென்னை, சேலம், அண்ணாமலை ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக் கழகப் பேராசிரியர்களுக்கும் மலேசியப் பல்கலைக்கழகப் பேராசிரியர்

(8-ம் பக்கம் பார்க்க)

## எண்ணம்

குற்றுயிரும்

குறையுயிரும்

ஆக்கப்பட்டுள்ள

ஜனநாயக

சுதந்திரங்களுக்காகவும்

அடிப்படை

மனித

உரிமைகளுக்காகவும்

நாங்கள்

கண்ணீர்

வடிக்கிறோம்.

# நெஞ்சு பொறுக்குதில்லையே! (2)

இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்களின் சுதந்திரங்கள் படிப்படியாக குறைக்கப்பட்டும் பறிக்கப் பட்டும் வந்துள்ளதோடல்லாமல் அவர்களின் பொருளாதாரமும் வாழ்க்கைத் தரமும் வருடத்துக்கு வருடம் மாதத்துக்கு மாதம் நாளுக்கு நாள் குறைக்கப்பட்டும் தடுக்கப்பட்டும் வந்துள்ளது. குறைக்கப்பட்டும் தடுக்கப் பட்டும் கொண்டிருக்கின்றது.

### உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இல்லை

ஒருவன் தனது உழைப்புக்கு ஏற்ற ஊதியமும் திறமைக்கு ஏற்ற உயர்வும் பெற வேண்டுமென்பது இந்த நாளில் உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப் பட்டுக் கடைப்பிடிக்கப் பட்டுக்கொண்டு வரப்படுகின்றது. ஆனால், இந்த நாட்டில் ஒருவன் எவ்வளவு பாடுபட்டு உழைத்தாலென்ன திறமைசாலியாக இருந்தாலென்ன அவன் தமிழ்ப்பேசும் ஒருவனாக இருந்தால் அவனுடைய உழைப்புக்கு ஏற்ற ஊதியமும் திறமைக்கு ஏற்ற உயர்வும் கிடைக்காத நிலை ஏற்பட்டு விட்டது. அவன், தன் விருப்பத்துக்கு மாறாகத் திணிக்கப்பட்டிருக்கும் சிங்களத்தைக் கற்றுக் கொண்டாலும்கூட, இன்று இந்த நாட்டில் பதவிகளும் பதவி உயர்வுகளும் இன விகிதாசாரப்படி வழங்கப் பட்டு வருவதினால், அவன் தமிழ்ப் பேசும் இனத்தவன் என்ற காரணத்தினால், அவனுக்கு அவனுடைய திறமைக்கு ஏற்ற உயர்வும் உழைப்புக்கு ஏற்ற ஊதியமும் கிடைக்காமல் போய்விடுகின்றது!

இந்த வகையில், இன்று அரசாங்க சேவையிலுள்ள எத்தனை தமிழ்ப் பேசும் ஊழியர்கள் தமக்குக் கிடைக்கவேண்டிய உயர்வும் ஊதியமும் கிடைக்கப் பெறாமல் உழைப்பில் தம்மில் குறைந்தவர்களுக்கும் சேவையில் தமக்குப் பிந்தியவர்களுக்கும் சேவையில் தமக்குப் பிந்தியவர்களுக்கும் திறமையில் தமக்குத் தாழ்ந்தவர்களுக்கும் கீழ் கைகட்டி வாய் பொத்தி அவர்களிடும் உத்தரவுகளைச் செய்ய வேண்டியிருக்கின்றது. அவர்கள் ஆளும் (சிங்கள) இனத்தவர்கள் என்ற ஒரே ஒரு காரணத்துக்காகவும் இவர்கள் ஆளப்படும் (தமிழ் பேசும்) இனத்தவர்கள் என்ற காரணத்தினாலும்! இதனால் எத்தனை தமிழ்ப் பேசும் ஊழியர்கள் தமது உத்தியோகங்களையே உதறித் தள்ளி விட்டு வாழ வழியே இன்றி அலைந்து திரியவேண்டி விட்டது!

### மாணவர்களுக்கு அநீதி

பாடுபட்டுப் படித்தும் திறமையாகச் சித்தியடைந்தும் எத்தனை தமிழ்ப் பேசும் மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் அனுமதிக்கப் படாமல் வெளியே தள்ளப்பட்டிருக்கிறார்கள்; வருடத்துக்கு வருடம் தள்ளப்பட்டுக் கொண்டு வருகிறார்கள், சிங்கள (ஆளும்) இனத்து மாணவர்களிலும் பார்க்க தமிழ்ப் பேசும் (ஆளப்படும்) இனத்து மாணவர்கள், அவர்கள் எடுக்கும் பாடங்களில் அதிகப்படியான புள்ளிகள் எடுக்க வேண்டுமென்ற வேறெந்த நாட்டிலுமில்லாத ஒரு புதிய நியதி இருப்பதினால்!

அறிவிலும் திறமையிலும் இவர்களிலும் எவ்வளவோ குறைந்தவர்களும் கூட ஆளும் (சிங்கள) இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிக்கும் பொழுது அவர்களிலும் பார்க்க அறிவிலும் திறமையிலும் எவ்வளவோ சிறந்தவர்கள் தமிழ் பேசும் (ஆளப்படும்) இனத்தவர்கள் என்பதினால் பல்கலைக் கழகத்தில் சேர்க்கப்படாமலும் சிறிய வேலைகளில் கூடச் சேர முடியாமலும் தெருவில் திரிய வேண்டியிருக்கின்றது! திறமையின் மிகுதியினால் பல்கலைக் கழகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சொற்ப தமிழ்ப் பேசும் மாணவர்களும் அவர்களுடைய தகமைகளுக்கேற்ப வகுப்புகள் கிடைக்காமல் கஷ்டப்பட வேண்டியிருக்கின்றது, தமிழ் மொழியில் அந்த அந்தப் பாடங்களுக்கு உரிய வகுப்புகள் நடத்தப்படாததால்! சில வகுப்புகளுக்கு வேண்டிய பாடங்களில் சித்தியடைந்த தமிழ் பேசும் மாணவர்கள் அப்பாடங்களுக்குரிய வகுப்புகள் நடத்தப் படாததால் வேறு வகுப்புகளுக்கு—நடனம், சங்கீதம் போன்ற கலைகள் பயில்வதற்கு — அனுப்பிவைக்கப் படுகின்றனர். இத்தனை தமிழ் பேசும் மக்களுக்குப் பல்கலைக் கழகத்தில் இடம் கொடுக்கப்பட்டது என்று கணக்குக்காட்டப் படுவதற்குப் போலும்!

இந்த நிலையில், வருங்காலத்தில், தமிழ் பேசும் மாணவர்களுக்கு இந்த நாட்டில் வைத்தியம், பொறியியல், கணிதம் முதலிய விஞ்ஞானத் துறைகளில் இடம் கிடைக்குமோ என்பது கேள்விக்குறியானதும் கேள்விக்குரியதுமே! காலப் போக்கில், இந்த நாட்டில், அந்தஸ்தை அளிப்பதும் அதிகாரத்தைக் கொடுப்பதுமான பதவிகளுக்குரிய படிப்புகள் சிங்கள (ஆளும்) இனத்தவர்களுக்கு மட்டுந்தான் என்றும் தொண்டு செய்வதற்கு வேண்டிய படிப்பு மட்டும் தமிழ்ப் பேசும் (ஆளப்படும்) இனத்தவருக்கு என்றும் ஏற்பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை!

### பொருளாதாரம் பாதிப்பு

தமிழ்ப் பிரதேசங்கள் என்று சொல்லப்படும் தமிழ்ப் பேசும் மக்கள் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து தனி அரசும் செய்து வந்த வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் வெளிநாட்டு நிபுணர்களைக்கூட — இந்த நாட்டு அரசாங்கமே ஆலோசனை கூறும்படி கேட்டு வரவழைத்திருந்த நிபுணர்களாலேயே — வடக்குக் கிழக்குப் பிரதேசங்களே குறிப்பிட்ட சில தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு ஏற்ற இடங்கள், மூலப் பொருட்கள் உட்பட எல்லா வசதிகளும் கொண்ட இடங்கள் என்று சிபாரிசு செய்யப் பட்டிருந்தும் அத் தொழிற்சாலைகள் அங்கு நிறுவப்படாமல் அத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப் பொருட்களோ போதிய வசதிகளோ இல்லாத சிங்களப் பிரதேசங்களில் அத் தொழிற்சாலைகளை அமைத்திருப்பதேன்? அமைத்துக் கொண்டு வருவதேன்?

### நெசவாலை

ஒரு காலத்திலே, இந்த நாட்டில், நூல் நூற்றலிலும் பருத்திச் செய்கையிலும் சிறந்து விளங்கியது தமிழ்ப் பிரதேசம் தான். பருத்தி நூல்கள் ஏற்றுமதி அவ்வளவுக்கு நடைபெற்றதால், தமிழ்ப் பகுதியிலிருந்த — இன்றும் இருக்கும் — ஒரு துறைமுகமே பருத்தித்துறை என்று அழைக்கப்பட்டதல்லவா? கண்டியரசர்களின் கொடிகளை அழகாகவும் அற்புதமாகவும் தயாரித்துக் கொடுத்தவர்களை தமிழ்ப் பேசும் மக்கள் தானே! இப்படிப்பட்ட மக்கள் வாழுகின்ற பிரதேசத்தில் — பிற நாட்டு நிபுணர்களாலும் சிபாரிசு செய்யப்பட்ட பிரதேசத்தில்—பருத்திச் செய்கையைத் தொடங்காமலும் நெசவாலையை நிறுவாமலும் சிங்களப் பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ளதேன்? நிறுவப் படவிருக்கும் அடுத்த நெசவாலைக்குத் தானும் தமிழ்ப் பிரதேசம் தெரிந்தெடுக்கப் படாததேன்?

வடகிழக்குப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள இரண்டொரு தொழிற்சாலைகளையும் விரிவு படுத்தாமல் ஏனோ தானோ என்று நடத்திவருவதேன்?

குறைந்த பட்சம் நூறு ஆண்டுகளுக்கு ஆகிலும் இந்த நாட்டுக்குத் தேவையான அளவை மாத்திரமன்றி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவுக்கும் சிமெந்து தயாரிப்பதற்கு வேண்டிய மூலப் பொருளாகிய சுண்ணாம்புக்கல் யாழ்ப்பாணப் பகுதியிலேயே இருக்கின்றது என்று தம்முராகிய புவியியல் பேராசிரியர் க. குலரத்தினம் அவர்கள் மாத்திரமல்ல இந்த நாட்டு அரசாங்கமே ஆலோசனை கூறும்படி அழைத்திருந்த வெளிநாட்டு ஆலோசகர்களே கூறியிருந்தும், காங்கேசன்துறையிலிருக்கும் சிமெந்து தொழிற்சாலையை விரிவுபடுத்தாமல் எத்தனையோ மைல்களுக்கு அப்பாலுள்ள காலியில் வேறொரு சிமெந்துத்தொழிற்சாலையை நிறுவி அத்தொழிற்சாலைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து மூலப் பொருளாகிய சுண்ணாம்புக் கற்களை எடுத்துச்சென்று சிமெந்து தயாரித்து வருவானேன்?

இவற்றைப்போல எவ்வளவோ எடுத்துக்காட்டலாம்!

இவை எல்லாம் எதற்காகச் செய்யப்படுகின்றன? நாட்டின் வளத்தைப் பெருக்குவதற்காகவா? இல்லவே இல்லை! இப்படியான செய்கைகளால் நாட்டின் வளம் தடைப்பட்டுக்கொண்டல்லவா வருகின்றது! இருந்தும் ஏன் இப்படிச் செய்யப் படுகின்றது? தமிழ்ப் பேசும் மக்களின் பொருளாதார வளர்ச்சியைத் தடைசெய்வதற்குத்தான்!

தமிழ்ப்பேசும் மக்களின் பொருளாதார வளர்ச்சியைத் தடைசெய்வதால் ஆளும் இனத்துக்கு என்ன லாபம்? அப்பொழுதுதானே தமிழ்ப் பேசும் மக்களை அடக்கி வைத்திருந்து ஆள முடியும், ஏழையைப் பணக்காரன் அடக்கி ஆள்வதைப் போன்று!

ஆகவே, நம் சுதந்திரங்களையும் பொருளாதார நிலையையும் படிப்படியாக இழந்து கொண்டு வரும் தமிழ்ப் பேசும் மக்கள் என்ன செய்யவேண்டும்?

எவ்வளவோ செய்ய இருக்கின்றன! ஆனால், முதலில் தமிழ்ப் பேசும் மக்கள் எல்லோரும் ஒருவித பிளவுமின்றி ஒற்றுமைப்படவேண்டும்.

**அருள்**

---

## "பயணம்"

மு. வே. யோகேஸ்வரன் எழுதிய 'பயணம்' வெளியீட்டு விழா 28.4 74 திரு. தேவன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இவ்விழாவில் பூநகர் மரியதாஸ் வெளியீட்டுரை வழங்க, காரை சுந்தரம்பிள்ளை, செங்கை ஆழியான், கே. டானியல் ஆய்வுரை நிகழ்த்துவர்: மற்றும் டாக்டர் எஸ். சுப்பிரமணியம், "குமரன்" ஆகியோர் உட்பட பலர் சிறப்புரையாற்றுவர்.

# வெளிநாடுகளில் இலங்கைத் தமிழர் பற்றி நடைபெறும் பொய்ப் பிரசாரம்!

## ஐ. நா. இதில் தலையிட முடியுமா?

திருமதி. பண்டாரநாயகாவின் சிங்கள அரசு, தமிழர்களின் எண்ணிக்கை, அவர்கள் வாழும் நிலப் பரப்பு போன்றவற்றைப் பற்றிய பொய்யான விவரங்களை உலகிற்கு அறிவிக்கின்றது. தமிழர் மிகச் சிறுபான்மையினர் தான் என்ற எண்ணத்தை வெளிநாடுகளிடம் உருவாக்குகின்றது. எடுத்துக் காட்டாக, மக்கள் தொகை பற்றிய அறிவிப்பில் கீழ்க் கண்ட விவரத்தைத் தந்துள்ளது.

| நிலப்பரப்பு ச. கி. மீ. | மக்கள் தொகை ('000) மொத்தம் 1971 - கணக்கெடுப்பு | சிங்களவர்கள் | இலங்கைத் தமிழர்கள் | இந்தியத் தமிழர்கள் | மூர்கள் |
|---|---|---|---|---|---|
| 65610 | 13,000 | 8885 | 1377 | 1377 | 740 |

— *The Europa Year Book* – 1972.

— மேற்காணும் பட்டியல் 'இலங்கைத் தமிழர்', இந்தியத் தமிழர்' ஆகியோரின் எண்ணிக்கை, ஏறக்குறைய சமம் எனத் தெரிவிக்கின்றது. 'இலங்கைத் தமிழர்' எண்ணிக்கையை வியக்கு மளவுக்குக் குறைத்துக் காட்டியிருப்பதோடு, இலங்கையில் வாழும் தமிழர்கள் அதிக அளவில் குடியுரிமை பெறத் தகுதியற்றவர்களா என்ற ஐயத்தை வெளிநாடுகளிடம் 'சிங்கள அரசு' உருவாக்கிவிடப் பார்க்கின்றது.

இந்த இழிவிற்குரிய பொய் விவரத்திற்கு ஆதரவாக, இலங்கையின் வரலாற்றுக் குறிப்புகளிலிருக்கும் தமிழர் பற்றிய செய்திகளை மறைத்தும், திரித்தும், அழித்தும் வருகின்றது.

தமிழர்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளை 'அரசுக்குரிய காடுகள்' என்று எல்லையிட்டு, அங்கே சிங்களவர் குடியேற்றங்களை வேகமாக நிறுவுகின்றது. இலங்கை அரசால் 1970-ல் காடுகள் என்ற பெயரால் மேற்கொள்ளப் பட்டுள்ள நிலப் பரப்பின் விவரம்:

| | ஏக்கர் |
|---|---|
| அறிவிக்கப்பட்ட அரசுடைமைக் காடுகள் ... | 1,396,919 |
| கொள்கையளவில் ஏற்கப்பட்ட காடுகள் ... | 1,362,738 |
| ஒதுக்கப்பட்ட இயற்கைக் காடுகள் ... | 4,353,743 |
| தேசியப் பூங்காக்கள் ... | 157,±40 |
| (Intermediate zones) இடைவெளி நிலங்கள் ... | 161,920 |
| தேசியக் காடுகள் ... | 528,880 |
| அரசுடைமைக் காடுகளின் மொத்தப் பரப்பு ... | 8,565,800 |

இவ்வகையில் தமிழர்கள் செறிந்த நிலப்பகுதிகளைக் 'காடுகள்' எனச் சொல்லி அரசுடைமையாக்கி, இலங்கை முழுவதையும் சிங்களப் பகுதியாக்க இலங்கை அரசு செய்கின்ற முயற்சிகள் இன்னும் பற்பல. இவ்வாறு திரித்துரைக்கப்படும் விவரங்கள், தமிழர் பகுதிகளில் மறைமுகப் படையெடுப்புகள், ஆகியவற்றின் மூலம் தமிழர் உலகின் கவனத்திற்குரிய தொகையினர் அல்ல என்பதை இலங்கை அரசு நிறுவிட எத்தனிக்கின்றது. அதன் புது அரசியல் அமைப்புச் சட்டம் தமிழர் தம் அடிப்படை உரிமைகள் இருந்த 'சுவடு' கூட இல்லாமல் செய்து விட்டதற்காகவே இந்த முயற்சிகளில் அது இன்னும் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றது!

### உண்மை விவரங்கள் பெற முடியாது!

ஐக்கிய நாடுகள்கூட தமிழர், தமிழர் பரப்பினைப் பற்றிய விவரங்களை, விளக்கங்களை இலங்கையரசிடம் கேட்டுப் பெறமுடியாது. ஏனெனில், அதன் சட்ட விதிகளுக்கிணங்க [Art. 2(7)], ஒரு நாட்டின் அரசை அந்த நாட்டைப் பற்றிய சரியான விவரங்களை அளிக்கும்படி தூண்டவோ, தானே அவற்றைச் சேகரிக்க தனித்து செயல்படவோ இயலாது. எனவேதான் வெளிநாடுகள் இலங்கையரசு சொல்வதையெல்லாம் நம்ப வேண்டிய நிலையில் உள்ளன.

> தமிழக அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களை நிறுவனராகக் கொண்டு சென்னையிலிருந்து வெளிவரும் 'உரிமை வேட்கை' எனும் முற்போக்கு இலக்கிய வார ஏட்டில் 'இலங்கைத் தமிழர் உரிமைப்போர்' எனும் தலைப்பில் திரு. செம்பியன் அவர்கள் எழுதியிருந்த முதல் மூன்று கட்டுரைகளை ஏற்கெனவே சுதந்திரனில் வெளியிட்டுள்ளோம். அக்கட்டுரைத் தொடரின் 4வது பகுதி இங்கு இடம் பெறுகிறது.
>
> —அர்.

"...The UN cannot legally though it may in fact compel a state to report if that state does not wish to..."

— Dr. Scheener
(Organizing for Peace)

### மற்றொரு பார்மோசா!

பிறந்த மண்ணில், வியர்வை சிந்திய நிலத்தில், தமிழர்கள் நிமிர்ந்து நிற்க இயலாதவாறு, அவர்களின் உழைப்பால் விளைந்த சிங்கள இன ஏகாதிபத்தியம் அவர்களைச் சிறுபான்மையினர் என ஒதுக்கி வருகின்றது. பார்மோசா தீவின் மக்கள் எழுச்சி கொள்ள—தம்மைத் தாமே சொந்த வலியுடையவர்களாக்கிக் கொள்ள—அந்தத் தீவைத் தாம் ஆட்சி செய்ய வழியே இல்லாமல், வல்லரசுகளின் கையாட்களான சியாங்கே சேக்கின், 'தேசியச் சீனர்' களால் அடிமைப் படுத்தப்பட்டிருப்பது போல, இலங்கைத் தமிழர் தாழ்வடைந்து வருகின்றனர்.

இந்தக் கொடுமையைத் தட்டிக்கேட்க யார் இருக்கிறார்கள்? ஐக்கிய நாடுகள் கழகம் இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்குமா என்ற நப்பாசை பலருக்கு எழலாம்!

உண்மையில் ஐ. நா. ஒரு சர்வதேசப் 'பொதுமேடை'யே அல்லாமல், உலகப் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டும் வன்மை வாய்ந்த 'அரசாண்மை' அல்ல.

ஐ. நா. வின், 'சர்வதேச பொருளாதார, அரசியல், சமுதாயப் பண்பாட்டு உரிமைகள்' என்பதற்கான விதிகளின்படி, எல்லா மக்களுக்கும் 'சுய நிர்ணய உரிமை' உண்டு; அவர்களின் அரசியல், சமுதாயப் பண்பாட்டு உரிமைகளைக் காத்துக் கொள்ள அவர்களே முடிவு செய்ய உரிமை உண்டு.

'All peoples have the right of self - determination. By virtue of that right they freely determine their political status and freely pursue their economic, social and cultural development'

(Art I, Int. Covenants)

உலகின் பல நாடுகளில் வாழும் மக்களைப் பற்றிய உண்மைகளை வைத்துப் பார்த்தால், ஐ. நா. வின் இந்த விதிகள் எவ்வளவு தூரம் பின்பற்றப்பட்டுள்ளன, செயலாக்கப்பட்டுள்ளன, மதிப்பளிக்கப்பட்டுள்ளன என்பது தெரியவரும்!

ஐ. நா. வல்லரசு நாடுகளின் ஒலிபரப்பு நிறுவனமாக இருக்கும் வரை, இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பற்றிய அதன் திட்டவட்டமான கருத்தைக் கூட எதிர்பார்ப்பது அறியாமையே. இதற்குத் தெளிவாக பதில் சொல்வது போல் திரு. ஊதாண்ட், 1971 ஆம் ஆண்டிற்கான பொதுச் செயலாளர் அறிக்கையில்,

'I feel obliged to mention a problem which has been almost daily in my mind during my timeas Secretary-General. I refer to the violation of humar rights within the frontiers of a state. Theoretically, the U. N. has little standing in such situations — and they are all too common.'

'ஒரு நாட்டின் எல்லைக்குள் மக்களின் உரிமைகள் பறிக்கப்படும் நிகழ்ச்சிகள் நடந்த வண்ணமாக உள்ளன. கொள்கையளவில் இவற்றைத் தடுக்க ஐ. நா. வினால் இயலாத சூழ்நிலை உள்ளது.'

இலங்கைத் தமிழர் பிரச்சினையை எந்தவொரு ஆசிய நாடோ, ஆசிய நாடுகளின் சங்கமோ தீர்க்க முன்வருவதாகவும் இல்லை. தென் கிழக்காசிய நாடுகள் குழுவில் (Association of South East Asian Nations) இலங்கை ஓர் உறுப்பு நாடாக இல்லாமல் போய் விட்டதால், இந்தப் பிரச்சினையைப் பற்றிய எதையும் அந்தச் சங்கம் செய்ய இயலாததாகிவிட்டது;

## தாக்கப்படும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நவில் ஈடுபட்டால் அந்த நாட்டிலுள்ள பாராளுமன்றம் இயங்கமுடியாது அழிந்துபோகும் நிலையே தோன்றும். பாராளுமன்றங்களை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட உங்கள் கழகம் இதுபோன்றதோர் நிலையினால் பாராளுமன்றம் அழியும் நிலை ஏற்படும்போது—அதைத் தவிர்ப்பதற்கு, அதாவது ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தேசிய சிறுபான்மை இனங்களுக்கும் பெரும்பான்மை இனத்துக்குமிடையே எழும் சிக்கல்களை தீர்ப்பதற்கு—ஏதாவது திட்டங்களை—வழிமுறைகளை வைத்திருக்கிறீர்களா?

"சாதாரணமாக ஒரு நாட்டின் தாக்கப்படும் தேசிய சிறுபான்மை இனங்கள் தமக்கு அந்நாட்டில் இழைக்கப்படும் அநீதிகள் பற்றி உங்களுக்கு விண்ணப்பித்தால் நீங்கள் ஒரு மத்தியஸ்த சபையை அமைத்து அந்த மத்தியஸ்த சபையின் தீர்ப்பின் மூலம் அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவமுடியுமா? அல்லது அப்படிப்பட்ட பிரச்சினைகளை ஏனைய காமன்வெல்த் நாடுகளின் உதவியோடு ஐக்கிய நாடுகள் சபைக்கு கொண்டுசெல்லமுடியுமா?

"இதுவரை இப்படிப்பட்ட பிரச்சினைகளில் நீங்கள் ஈடுபடாவிட்டாலும் இனியாவது ஈடுபடுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

—இவ்வாறு திரு. தர்மலிங்கம் பேசியபோது— இலங்கையின் சார்பில் மற்றோர் பிரதிநிதியாகக் கலந்து கொண்டிருந்த கட்டான பா. உ. திரு. சில்வா குறுக்கிட்டார்.

"இவர் (திரு. தர்மலிங்கம்) மறைமுகமாக இலங்கையிலுள்ள பிரச்சினைகளையே இங்கு குறிப்பிடுகிறார். அப்பிரச்சினைகளை அவர் இங்கு எழுப்பியிருக்கக் கூடாது"—

என்று திரு. சில்வா அங்கு கூறி "பைக்குள் இருந்த பூனைக்குட்டியை வெளியே விட்டுவிட்டார்." மலேசியப் பிரதிநிதிகளும் திரு. தர்மலிங்கத்தின் கேள்வியை ஆட்சேபித்தனர்.

இதைத் தொடர்ந்து, பாராளுமன்ற கழகத்தின் பொதுச்செயலாளர் திரு. தர்மலிங்கத்துக்கு பதிலளிக்கையில்— "நாங்கள் எந்த ஒரு நாட்டினதும் உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிட மாட்டோம் ஆனால் அப்படி இனங்களுக்கிடையே பாரபட்சம் காட்டி நடத்துகிற நாடுகளை நாம் எமது கழகத்தில் உறுப்பினர்களாக வைத்திருக்க விரும்புவதில்லை. இப்பிரச்சினைகளில் நாம் நேரடியாக ஈடுபட்டால் காமன்வெல்த் கழகமே குலைந்து போய் விடும்" என்றார்.

## உங்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

11-4-74ம் திகதியையுடைய 45ம் இலக்கச் சுற்றறிக்கையும், 27-2-74ம் திகதியையும் ஆர்டி. ஆர். எம்பி. 1/73ஆம் எண்ணையுமுடைய கூட்டுப்பசளை பற்றிய சுற்றறிக்கையும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமே உள்ளன; தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டாவது சுற்றறிக்கையுடன் அனுப்பப் பட்ட 27-2-74ஆம் திகதிக் கடிதம் தனிச் சிங்களத்திலே உளது என்பதையும் வெறுப்புடனும் வேதனையுடனும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்போது திரு. தர்மலிங்கம் குறுக்கிட்டு, "தலையிடும் படி நான் உங்களைக் கேட்கவில்லை" நட்பு அடிப்படையில் அப்படிப்பட்ட நாடுகளுக்கு புத்திமதியாவது சொல்லும்படியே கோருகிறோம்" என்று கூறினார்.

கருத்தரங்கு முடிந்த பின்னர், காமன்வெல்த் பாராளுமன்றக் கழக மாநாட்டுக்கு வந்திருந்த வெளிநாடுகளின் பிரதிநிதிகள், திரு. தர்மலிங்கத்தை மொய்த்துக்கொண்டு இலங்கைத்தமிழர் நிலைபற்றி ஆவலுடன் கேட்டு அறிந்தனர்; அவர்களுக்கெல்லாம், இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப் பட்டுவரும் அநீதிகள் பற்றி ஆதியோடந்தமாக எடுத்துச்சொன்ன திரு. தர்மலிங்கம், தம்முடன் எடுத்துச் சென்றிருந்த இலங்கைத் தமிழர் நிலையை விளக்கும் பிரசுரங்களை அவர்களுக்கு விநியோகித்தார்:

சர்வதேச நீதிச்சபைக்கு தந்தை செல்வா அவர்களினால் அனுப்பிவைக்கப்பட்ட மகஜர் உட்பட மற்றும் பல பிரசுரங்களை திரு. தர்மலிங்கம் தம்முடன் எடுத்துச் சென்றிருந்தது குறிப்பிடத் தக்கது.

### எடித் பொண்டுடன் சந்திப்பு

இலங்கைக்கு வந்து, மலையகத் தமிழர்களின் பிரச்சினைகளை நேரடியாகப் பார்த்து—தாம் பார்த்தவற்றை எல்லாம் புள்ளிவிபரத்துடன் WAR AND WANT என்ற தலைப்பில் ஒரு சிறு நூலாக வெளியிட்டிருக்கிறார் லண்டனைச் சேர்ந்த செல்வி எடித் எம். பொண்ட். அவரையும் திரு தர்மலிங்கம் சந்தித்துப் பேசினார். நோய், கல்வியில்லாமை, பட்டினி, மூன்றும் பாதிக்கப்பட்டுள்ள பயங்கர நிலைமை மலைநாட்டுத் தமிழரிடையே நிலவுவதைத் தாம் நேரில் கண்டு அதிர்ச்சியடைந்ததாக செல்வி பொண்ட் திரு. தர்மலிங்கத்திடம் தெரிவித்தார்.

திரு. தர்மலிங்கம், லண்டன் பி. பி. சி. தமிழோசை நிகழ்ச்சிக்கும் செவ்வி கொடுத்தார். அத்துடன் இலண்டன் தமிழ்ச் சங்கத்தினர், இலண்டன் முரசு ஆசிரியர்-நிர்வாகிகளையும் திரு. தர்மலிங்கம் லண்டனில் தங்கியிருந்தபோது சந்தித்துப் பேசினார்.


"சாணை தீட்டிய கத்தி முனைபோல் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். பெரிய விஷயமாய் இருப்பினும் சரி, சிறிய விஷயமாய் இருப்பினும் சரி, நியாய அநியாயம் தெரிந்து சரியாக நடக்க முற்பட வேண்டும்."

— ராஜாஜி.

15 மில்க்வைற் நிலசேப் மேலுறைகளை அனுப்பி அறிவு நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்;

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும் இறுதி அறிக்கையும் பதிவு விண்ணப்பப் பத்திரங்களும் அனுப்பப்பட்டன.

'இலங்கைப் பல்கலைக் கழகத்திற் பேராதனை வளாகத்தைச் சேர்ந்த தமிழ் (எல்லாத் துறை) விரிவுரையாளர்களுக்கும் அறிக்கைகள் நேரிற் கொடுக்கப்பட்டன. பெரும்பாலானோர் (சிங்கள விரிவுரையாளர்கள் உட்பட) கட்டுரைகள் அனுப்பினர். கொழும்பு வளாகத்தினரின் கட்டுரைகளைப் பெறும் பொறுப்பைக் கலாநிதி பூலோகசிங்கம் ஏற்றுக் கொண்டார். அங்கிருந்தும் பல கட்டுரைகள் கிடைத்தன.

'வித்தியோதயப் பல்கலைக் கழக வளாகத் தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி கா. சிவத்தம்பிக்கும் வித்தியாலங்காரப் பல்கலைக் கழக வளாகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி க. கைலாசபதிக்கும் ஒக்டோபர் 8ஆம் நாள் (1973) ஆராய்ச்சி மாநாட்டிற் கலந்து ஒத்துழைக்கும்படி கடிதம் எழுதினேன். நினைவு மலருக்கும் மாநாட்டுக்கும் கட்டுரைகள் எழுதும்படி கேட்டிருந்தேன். பதிவுப் பத்திரங்களிற் பல பிரதிகள் அனுப்பி அவ்வளாகங்களில் இம்மகாநாட்டிற் பங்கு பற்ற விரும்பும் ஏனைய விரிவுரையாளர்களுக்கும் பத்திரங்களைக் கொடுக்கும்படி கேட்டிருந்தேன். அவர்களைப் பின்பு சந்தித்த நேரங்களிலும் கட்டுரைகள் அனுப்புவது பற்றி ஞாபகப் படுத்தியும் அவர்கள் கட்டுரைகள் சமர்ப்பிக்கவில்லை; பார்வையாளர்களாகக் கூட மாநாட்டிற் கலந்து கொள்ள கொள்ளவில்லை.'

அரசாங்க ஆதரவு நாளேடுகளும், அரசாங்க ஆதரவாளர்களான அடிமைத் தமிழர்களும், தமிழ்மாநாட்டுக்கு எதிராக போட்ட தடைகளையும் முட்டுக்கட்டைகளையும் இன்னும் விரிக்கின் பெருகும்.

இவ்வளவு சோதனைகளையும், எதிர்ப்புக்களையும் சந்திக்க நேர்ந்த போதிலும்—அரசாங்கத்தின் ஆதரவை கௌரவமான முறையில் மாநாட்டுக்குப் பெற்றுக் கொள்வதில் மாநாட்டுக் குழுவினர் ஆர்வம் காட்டினர். குடியரசுத் தலைவரை மாநாட்டைத் தொடக்கி வைக்க வரும்படி அழைப்பு விடுத்தனர். அந்த அழைப்பு நிராகரிக்கப்பட்டது.

பிரதமர் உட்பட சகல அமைச்சர்களுக்கும், தேசிய பேரவை உறுப்பினர்களுக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பினர். மாநாட்டுக்கு ஒர் வாழ்த்துச் செய்தியையாவது அனுப்பிவைப்பதற்கு பிரதமரின் பெருந்தன்மை அவரை அனுமதிக்கவில்லைப்போலும்!

தமிழ் மாநாட்டுக்கு பூரண ஒத்துழைப்பும் உதவியும் கொடுப்பதன்மூலம், தமிழ் மக்களின் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் சம்பாதித்துக்கொள்ளும் வாய்ப்பை அரசு கைநழுவ விட்டது மட்டுமல்ல—மாநாட்டை தேவையில்லாமல் எதிர்த்து, மேலும் பகையையும் கசப்பையுமே வளர்த்துக்கொண்டது.

மாநாட்டு அழைப்பை ஏற்று மாநாட்டுக்கு வருகை தந்திருந்த ஒரேயொரு சிங்கள பாராளுமன்ற உறுப்பினர் மூதியான்சே தென்னக்கூன் அவர்கள் மட்டுமே. அரசியல்கலப்புடன் மாநாடு நடந்ததாக கூறப்படுவதை மாநாட்டில் நேரில் கலந்து கொண்ட அவர் திட்டவட்டமாக மறுத்துரைத்திருக்கிறார்.

நாட்கள் ஒவ்வொன்றாக நகர்ந்தன—மாநாட்டு திகதியும் நெருங்கிக்கொண்டேவந்தது. சிங்கள அரசோ கல்லுப்போல இருந்தது.

# யாழில் எழுந்த தமிழோசை

அரசின் கட்டளைப்படி மாநாட்டைக் கொழும்பில் நடத்தாமல் யாழ்ப்பாணத்தில் நடத்துவதானால் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு 'விசா' கொடுக்கமாட்டோம் என்று ஒருமுறைக்கு இருமுறை அறிவித்தார் துணைப் பாதுகாப்பு அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி!

தமிழ் மாநாட்டுக்கு வரும் பிரதிநிதிகளுக்கு விசா கொடுக்காதே என்று இலங்கை அரசு வெளிநாடுகளிலுள்ள தனது தூதரகங்களுக்கு உத்தரவிட்டது.

தமிழ் மாநாட்டுக்கு வருகைதரவிருந்த ஆராய்ச்சி அறிஞர்களின் பெயர் விபரங்கள் அடங்கியபட்டியலை விமானநிலைய அதிகாரிகளிடம் கொடுத்து—அதில் குறிப்பிடப்பட்டுள்ளோர் வந்தால் அவர்களை நாட்டுக்குள் நுழைய அனுமதிக்கக்கூடாதென அரசு உத்தரவு போட்டது.

அந்த உத்தரவுக்கிணங்க—மாநாட்டுக்கென அமெரிக்கா, இங்கிலாந்துபோன்ற நாடுகளிலிருந்து கட்டுநாயகா விமான நிலையத்தில் வந்திறங்கிய ஆராய்ச்சி அறிஞர்கள் பலர், விமான நிலைய அதிகாரிகளால் அவமரியாதை செய்யப்பட்டு—மிருகத்தனமான முறையில் பலவந்தமாக திருப்பி அனுப்பப்பட்டனர். அப்படி திருப்பி அனுப்பப்பட்டவர்களில் இலண்டனைச் சேர்ந்த திரு தில்லைநாயகம், அமெரிக்காவைச் சேர்ந்த திரு. சிப்மன் ஆகியோர் இருவர்.

யாழ் வீரசிங்கம் மண்டபத்தை மாநாடு நடத்துவதற்குகெனமுற்பணம் கட்டிப் பதிவு செய்துவைத்திருந்தது இலங்கைக்கிளை. அப்படியிருந்தும் மாநாட்டுக்கு மண்டபம் தரப்படமாட்டாது என்றுகூறி அனுமதியை ரத்து செய்தது அரசு.

பாடசாலைகள், கல்லூரிகள் எதையும் மாநாட்டுக்கெனகொடுக்கக்கூடாதென்றும் பாடசாலைகளில் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கொடிகள் விற்பனை செய்யப்படக்கூடாது என்றும் கல்வியமைச்சினால் தடைகள் பல விதிக்கப்பட்டன.

இவற்றையெல்லாம் கேட்டு தமிழர் நெஞ்சமெல்லாம் கொதித்தது—தமிழர்களாகிய நாம் நம் மொழி கலாசாரம் சம்பந்தமான ஒரு மாநாட்டை நாம் விரும்பிய இடத்தில் தான் வைப்போம்—அப்படி வைக்காதே என்று கூறுவதற்கு சிங்கள அரசுக்கு என்ன அதிகாரம் உண்டு? என்று கேட்டு குமுறியெழுந்தது தமிழ்க்குலம்!

அரசின் இந்த அக்கிரமச் செயல்கள்தமிழனது உணர்ச்சியைத் தட்டிவிட்டது. எழுச்சியை ஏற்படுத்தியது—ஆம், தூங்கும் புலியை இடறிய பெருமை சிங்கள அரசுக்கே உரியது!

அரசு எப்படி எதிர்த்தாலும்—என்ன தடை வந்தாலும்—பதவி பறிபோனாலும்—சிறை செல்ல நேர்ந்தாலும்—திட்டமிட்டபடி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தியே தீருவோம்—என்று கர்ச்சித்தார் பேராசிரியர் வித்தியானந்தன்:

மண்டபம் எதுவும் தராவிட்டால் என்ன? கொட்டில் போட்டாவது எங்கள் கோமளத் தமிழ்மொழியின் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தியே தீருவோம் என்று உறுதியுடன் முழங்கினர் மாநாட்டுக்குழுவினர். அரசுதடைவிதித்தால் அதை மீறவும் அவர்கள் தயாராக இருப்பதாக ஏடுகளில் செய்திகள் வந்தன.

மாநாட்டுக்குழுவினரின் இந்த உறுதியும் வைராக்கியமும் தமிழ் மக்களிடையே எழுந்த கொந்தளிப்பும் எழுச்சியும் அரசுக்கு சற்று அச்சத்தை ஏற்படுத்தியது. அதே நேரத்தில், மாநாட்டுக்காக இங்கு வந்து, அரசின் அவமரியாதைக்கு ஆளாகி, திரும்பிச்சென்ற வெளிநாட்டு அறிஞர்கள் இந்திய வானொலி, இலண்டன் பி. பி. சி. போன்றவற்றிலும், உலகப்பெரும் புதினப் பத்திரிகைகளிலும், தமக்கு இலங்கை அரசு இழைத்த அட்டூழியத்தையும், இலங்கையில் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகூட நடத்தவிடாத அளவுக்கு இலங்கைத்தமிழர்களின் கலாசார உரிமையை இலங்கை அரசு மறுக்கின்ற கொடுமையைப் பற்றியும் எடுத்துரைத்தனர்!

இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகத் தான் இழைத்து வரும் அக்கிரமம் - இனக்கொலை - உலக நாடுகளில் எல்லாம் தெரிய ஆரம்பித்ததும், இலங்கை அரசு விழித்துக்கத் தொடங்கியது. மாநாட்டுக்கும் அரசியலுக்கும் சம்பந்தம் இடையாது என்று மாநாட்டு இணைப் பொதுச்செயலாளர் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா தம்மிடம் உறுதியளித்ததாக கூறி - மாநாடு தொடங்குவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர்—அதாவது 1973 டிசம்பர் 31ம் திகதி—'விசா' வழங்குவதாக பிரதமர் அறிவித்தார்.

மாநாட்டுக்கும் அரசியலுக்கும் தொடர்பில்லையென்று தானே மாநாட்டுக் குழுவினர் ஆரம்பம் முதலே கூறிவந்திருக்கின்றனர்? அது டிசம்பர் 31ம் திகதி வரை அரசுக்கு புரியாமலிருந்ததென்று கூறமுடியுமா?

தமிழ் மாநாடு நடக்காமல் தடுத்திடவே அரசு கடைசிவரை முயன்றது — ஆனால் வெளிநாடுகளில் ஏற்பட்ட பிரதிபலிப்புக்கு அஞ்சியே—உலக அபிப்பிராயத்துக்கு பயந்தே இறுதி நேரத்தில் விசா வழங்க வேண்டா வெறுப்பாக முன் வந்தது—

இதுவே உண்மையாகும். ஆம் உலக அபிப்பிராயத்துக்கு எவ்வளவு பெரிய சக்தியுண்டு என்பது இதிலிருந்து புரிகிறதல்லவா?

ஆனால் உலகத் தமிழ் மாநாட்டை இலங்கை அரசினால் தடை செய்ய முடியாமல் போனாலும் — 'விசா' வழங்குவதில் அது கடைசிவரை 'பிகு' பண்ணி வந்ததன் காரணமாக, மாநாட்டின் சிறப்பை அரசு ஓரளவு கெடுத்துவிட்டது என்பது உண்மைதான். தடங்கல் ஏதும் இன்றி ஆரம்பத்திலேயே 'விசா' வழங்கப்பட்டிருந்தால், இன்னும் ஏராளமான அறிஞர்கள் மாநாட்டுக்கு வருகை தந்திருப்பார்கள் அல்லவா?

இவ்வளவு எதிர்ப்புக்களையும்—உட்பகையையும் புறப்பகையையும் தமிழ் மக்கள் ஆதரவுடன் முறியடித்துவிட்டுத்தான் நான்காவது உலகத் தமிழ் மாநாடு யாழ்ப்பாணத்தில் தொடங்கியது—

'தமிழுக்கு தொண்டு செய்யும் தமிழனுக்கு தடை செய்யும் நெடுங்குன்றம் தூள் தூளாகும்.'

என்ற பாவேந்தரின் கருத்து ஈழத்தில் உயிர் பெற்றது.

ஃ ஃ

"ரொம்ப அருமையாக — இனிமையாகப் பேசினீர்கள் உங்களுக்கு என் வாழ்த்துக்கள்—"

ஏது—என் மனைவி என்னை ஏன் இப்படித் திடீரென்று வாழ்த்த வேண்டும்? நான் எங்கே எப்போது இனிமையாகப் பேசினேன் — என்ற ஐயத்துடன் நிமிர்ந்து பார்த்தபோதுதான் அவள் என்னை வாழ்த்தவில்லை என்பது புரிந்தது.

மதிய உணவு முடிந்தவுடன் பிரெஞ்சு நாட்டுப் பேராசிரியை செல்வி. பெரண்டா பெக்குடன்தான் 'ஹாயாக' அவள் பேசிக் கொண்டிருந்தாள்.

"அப்படியா? ரொம்ப நன்றி — தான் உங்களைப் போல நல்ல தமிழ் பேச மாட்டேன் — கொச்சை கொச்சையாகத்தான் பேசுவேன்" என்று பதிலளிக்கிறார் பெரண்டா பெக்—

உணவு முடிந்து எல்லோரும் மீண்டும் புறப்படுகிறோம் வீரசிங்கம் மண்டபம் நோக்கி!—

— வளரும்

## தமிழினத்தை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழன், உரிமை, உயர்வு, கல்வி, புகழ், வளம், வாழ்வு இவையெல்லாம் பெற்று தன்னிகரில்லாத் தமிழனாகத் திகழ வேண்டுமென்று கவிஞன் கனவு கண்டான் இதனை—

எல்லாரும் தமிழ் நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்று
பன்னூறும் கலை ஞானத் தரன்
பராக்கிரமத்தால்,
அன்பால்
உன்னத இமமலை போல்
ஓங்கிடும் கீர்த்திபெற்று
இன்புற்றார் என்று
மற்றோர்
இயம்பக்கேட்டிடல் எந் நாளோ!

எனும் அடிகளால் அறிந்து வியக்கிறோம்.

'தமிழ் வளர்க்கும் சங்கம் ஒன்றுதோன்றிட வேண்டும்' என அவன் கண்ட கனவு இன்று நிறைவேறிவிட்டதும் கண்டு களிப்படைகிறோம்.

'அன்றந்தலங்கையினை ஆண்ட மறத்தமிழன், இராவணன் எங்கள் மூதாதை' என்ற உண்மையை, இன்றும், பலர் ஏற்க மறுக்கின்றனர்.

ஆரிய ஏடுகளை பள்ளியில் படிக்கும் மாணவர் மனதிலே, இராவணன் அரக்கனாக, கொடியவனாக, காட்சியளிக்கிறான். இத்தகைய கதைகளால்தான், தமிழினம், தன் திறன் தெரியும் வழியின்றித் தவிக்கிறது.

இராவணனை வீரனாக, வீரவாளும், நீண்ட ஆயுளும் பெற்ற தவமுனிவனாக, இசைவல்லானாக, சித்தரிக்கும் ஆரிய ஏடுகள், அவனை தமிழ் —திராவிட— வேந்தனாக, ஐயிரண்டு திசையிலும் தன் புகழை வைத்தவனாக, சூழ்ச்சி விரும்பாதவனாக, வெஞ்சமரில் தேர் நின்று போர் புரிந்தவனை, சீரும் சிறப்பும் பெற்ற ஒரு இனத்தின் தலைவனாக, சித்தரிக்கத் தவறிவிட்டன.

இராவணன் திராவிடப் பேரரசின் தலைவனாகத் திகழ்ந்தான் ஆரியர் அவனைக் சூழ்ச்சியால் சாகடித்தனர்; வஞ்சக விபீடணன் அந்தச் சூழ்ச்சிக்குத் துணை செய்தான், என்ற உண்மையை உலகறியச்செய்ய—

'தென் திசையைப் பார்க்கின்றேன் என்சொல்
வேன் என்றன்
சிந்தையெலாம் தோள்க
ளெலாம் பூரிக்குதடா
அன்றந்தலங்கையினை
ஆண்ட மறத்தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும்
தன் புகழைவைத்தோன்
குன்றெடுக்கும் தோளான்
கொடைகொடுக்கும்
கையான்
......என் தமிழர் மூதாதை
...இராவணன் காண்"

"என்று பாடி, தமிழனைத்
தட்டியெழுப்பும்பணியாக
வீழ்ச்சியுறு தமிழகத்தில்
எழுச்சிவேண்டும்.
விசை ஒடிந்த தேகத்தில்
வன்மை வேண்டும்...
...ராவணன் தன் கீர்த்தி
சொல்லி அவன் நாமம்
வாழ்த்த வேண்டும்"

என்று வேண்டிக்கொண்டான்: நன்றியுள்ள தமிழ்ப் புலவன் இந்தப் புரட்சிக் கவிஞன், பாரதிதாசன் நாமம் வாழ்க.

# சங்கப் பலகை

## ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை

ஈழத்தமிழகத்தில், 'கல்லடி வேலன்' என்று—வாசாலகத்திற்கும், புத்திக் கூர்மைக்கும், துணிச்சலுக்கும் பேர்போன — விகடகவி ஒருவரைத்தான் பலர் அறிந்திருந்தோம். அந்தக் கல்லடி வேலுப்பிள்ளையின் பன்முகப்பட்ட சாதனைத் திறனை தெட்டத்தெளிவாக, ஆதாரபூர்வமாகக் காட்டும் நூல்தான் கவிஞர் விஜயேந்திரன் எழுதியுள்ள, 'ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை' என்கிற நூல்;

கலாநிதி வித்தியானந்தன் அவர்கள் தம் வாழ்த்துரையிலே குறிப்பிட்டுள்ளது போல, கவிதை, உரை நடை, பத்திரிகை, கண்டனம், கட்டுரை, வரலாறு, ஆராய்ச்சி — முதலிய பலதுறைகளில் முன்னணியில் வைத்துக் கணிக்கப்பட வேண்டியவர் கல்லடியார் என்பதை இந்நூலைப் படிக்கிற ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளவே செய்வர்.

'சுதேச நாட்டியம்' என்கிற பத்திரிகையை 1902ம் ஆண்டிலிருந்து ஏறத்தாழ முப்பது ஆண்டு காலம்வரை, சமூகப் பொறுப் புணர்ச்சியோடும், தர்மாவேசத்துடனும் புலவர் நடாத்திய வரலாற்றை இந்நூல் மூலம் அறிகிறோம். இற்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்பே கூட பகுத்தறிவுடன் கூடிய தவின சிந்தனைத் திறனைப் பெற்றிருந்த கவிஞரைப் பற்றி, இந்நாள் வரையும் எம்மவர்கள் கவனம்செலுத்தாமையையிட்டு வருத்தமும் அதைத் தமது பணி மூலம் விஜயேந்திரன் சீராக்கி விட்டார் என்கிற மனநிறைவும் ஒரே போதிலேயே எழுகின்றன. நூலாசிரியரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இந்நூலை அடியொற்றி கல்லடியார் பற்றியும் தகுந்த ஆய்வுக்குட்படுத்தப்படாத பற்றைய பெரியார்கள் பற்றியும், ஆராய்ச்சி — வரலாற்று நூல்கள் வெளி வருதல் மிக அவசியம்.

விலை: 4-00.

வெளியீடு: — நயினார் பிரசுரம், மாவிட்டபுரம்.

# யாழ் பொதுமக்கள் வரிப்பணத்தில் நடைபெறப்போவது

# வெள்ளி விழாவா? மேயரின் பிறந்தநாள் விழாவா?

## இருபத்தாருவது ஆண்டும் முடிந்தபின் ஏனிந்தக் கபட நாடகம்?

### துரையப்பரின் துரோக வரலாறும் யாழ் நகர் மக்கள் கடமையும்!

வெள்ளி விழா கொண்டாட எத்தனிக்கும் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் பற்றிய சுதந்திரன் செய்தி வாசித்தேன்:

ஜனநாயகத்தைக்கொலை செய்தவர்கள் என்பது மட்டுமல்ல வரலாற்றையே குளறுபடி செய்கிருர்கள் என்ற உண்மையையும் சுதந்திரன் வெளிப்படுத்தவேண்டும்:

யாழ்ப்பாண மாநகரசபை 1948 ஜனவரி மாதத்திற்தான் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அதன் முதல் மேயர் சாம். ஏ. சபாபதி அவர்கள். ஆகவே இப்போது யாழ்ப்பாண மாநகரசபை தனது 26வது அகவையையும் தாண்டிவிட்டது. ஆகவே வெள்ளிவிழா என்ற பேச்சில் உண்மை சிறிதும் இல்லை. கொண்டாடப்படுவது மாநகரசபையின் 25வது ஆண்டு விழாவாக இருந்தாலும் அதைக் கொண்டாடப் படவிருப்பது மேயரின் பிறந்த நாளே அல்லாது மாநகர சபையின் 'வெள்ளி விழா' அல்ல வென்பதை:

பொது மக்கள், வரியிறுப்பாளர் சிறப்பாக மாணவர்கள் இத் தகிடுதத்தங்களில் பித்தலாட்டங்களில் துணை போகப்படாது. மேற்படி ஒழுங்குகள் பிரதமரை வரவேற்கும் வைபவமாகவும் மாறலாம்' ஆகவே ஏமாந்து விட்டோம் ஏமாற்றப் பட்டோம் என்று பின்புலம்பாது இருக்க இப்போதே நல்லவர்கள் யாவரும் வெள்ளி விழாக்கொண்டாட்ட எத்தனங்களுடன் தமக்குள்ள உறவுகளை விட்டு விடவேண்டும். யாழ்ப்பாணம் மாநகர சபையில் பிரதிநிதித்துவம் இல்லாத வட்டாரங்களில் விழா நடைபெறும் காலத்தில் ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்களை ஒழுங்கு செய்வது குறித்து தமிழர் கூட்டணியும், வரியிறுப்பாளர் சங்கமும் சிறப்பாக தமிழ் இளையர் இயக்கமும் ஆலோசித்து ஒழுங்கு செய்வது விரும்பத்தக்கது.

1958ல் நடைபெற்ற இனக்கலவரத்தின் போது தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கைதாகிய சமயம் யாழ் மாநகர சபை உறுப்பினர்களாகவிருந்த முன்னுள் மூதவை உறுப்பினர் ஜி. நல்லையா அவர்களும், எஸ். துரைசிங்கம் அவர்களும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்கள். மேற்படி உறுப்பினர் இருவரும் தடுப்புக்காவலில் இருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்கள் இருவரது ஆதரவையும் பெற்று அப்போது பதவியில் இருந்து வந்த மாநகர சபை மேயர் திரு. காசிப்பிள்ளை அவர்கள் பேரில் நம்பிக்கை இல்லாப் பிரேரணையை நிறைவேற்றித் தாம் பதவியில் குந்திக்கொண்டவர்தான் ஆல்பிரட் (டி) துரையப்பா என்பதை மக்கள் இன்றும் கூட நினைவில் வைத்திருக்கிருர்கள்.

முதல்கோணல் முழுதும் கோணல் என்றவாறு தவ

ருன சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பதவியில் ஏறிக்கொண்டவரான திரு. துரையப்பா அப்பதவியால் தாம் பெற்ற தவருன செல்வாக்கைப் பயன்படுத்திப் பாராளுமன்ற படிக்கட்டையும் தாண்டிப் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைக்கைப் பற்றினர்.

அந்நாட்களில்தான் தனிச்சிங்கள நீதிமன்றச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதை ஆட்சேபித்து கச்சேரி முன் தமிழரசுக் கட்சி 1961 பெப்ரவரி 20ம் திகதி ஆரம்பித்த சாத்வீக மறியல் போராட்டம் பின் சட்ட மறுப்பு இயக்கமாக வட, கிழக்கு மாகாணமெங்கும் விஸ்வரூபம் எடுத்தது. ஆரம்பத்தில் மறியல் போராட்டத்தில் கலந்துகொள்ளாது தொடர்ந்தும் அரசாங்க ஆதரவாளராகக் காட்டிக்கொள்ள விரும்பிய அந்நாள் யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினர், போராட்டம் தொடங்கியதும் போராட்டத்தில் கலந்து கொள்ளும்படி பொது மக்கள் தம்மைப் பலவந்தம் பண்ணுதிருக்க இந்தியாவுக்கு கம்பி நீட்டிஞர். இது சரித்திரம்:

இப்போதும் பிரச்சினைகள் உண்டாகும் வேளையில் கம்பி நீட்டும் வரலாறு தொடருகிறது: புதிய அரசமைப்புத் திட்டம் நிறைவேறிய போதும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஜாம் ஜாமென்று நடைபெற்றுக்கொண்டிருந்தநேரத்திலும் திரு துரையப்பா நாட்டில் இருக்கவில்லை முறையே தூரகிழக்கு நாடொன்றிலும், இந்தியாவிலும் அஞ்ஞாதவாசம் புரிந்தார். இப்படிப்பட்டவர்தான் குண்டுச் சட்டியில் குதிரையோட்டும் தமிழர் தலைவராக வேடம் போடுகிருர்.

1961 ஏப்பிரல் 17ல் அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டதும் துரையப்பாவை மாநகர சபைத்தேர்தலில் சுயேச்சையாகப்போட்டியிட்டுத் தோற்கடித்த ஆசிரியர் ஜே. சு. அழகையாவும், ஒரு கையை இழந்து வலது குறைந்தவராக இருந்தாலும் அந்நாளில் முதல்வராக இருந்த காரணத்தால் காவலில் வைக்கப்பட்டனர். அத்துடன் இரண்டு நாட்கள் ஊரடங்குச் சட்டமும் அமுலில் இருந்தது.

ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள போதே மாநகர சபை நிர்வாகம் ஸ்தம்பித்து விட்டதால் கலைக்கப்பட வேண்டும் என்று அமைச்சருக்கு தந்தி அனுப்பிய யாழ் பாராளுமன்ற உறுப்பினர் சாட்சாத் துரையப்பா அவர்களேயன்றி வேறு யாரும் இல்லை;

மாநகர சபைத்தேர்தலில் தம்மை தோற்கடித்த ஜே. சு. அழகையா ஆசிரியரைப் பதவிதுறக்கச் செய்யும் நோக்கமாக அவர் படிப்பித்து வந்த கொழும்புத்துறை சாதன பாடசாலையே அகில இலங்கையிலும் முதன் முதலாகப் பொறுப்பேற்கப்

பட்டது, அவரை அரசாங்க ஆசிரியராக்கும் பொருட்டு: மக்கள் அளித்த ஆணையை மகேஸ்வரன் ஆணையாகக் காப்பாற்ற ஆசிரியர் அழகையா தமது ஆசிரியர் பதவியையே ராஜிணுமாச் செய்தார்; அரசியலைத் துறந்தார் இல்லை.

இதன்பின் அப்போது உள்ளூராட்சி அமைச்சராக இருந்த மாநாமசமரவீரவை கைக்குள் போட்டுக்கொண்டு தாம் இலகுவாக வெல்லக் கூடியதாக சச்சமொட்டை வட்டாரத்

'இளங்கோ'

ழைத் தனிப்படுத்தி பாசையூர் வட்டாரமெனப் புதிய வட்டாரமொன்றை உருவாக்கிஞர். துரையப்பாவை சச்சமொட்டை வட்டார உறுப்பினர் ஆக்கும் உள்நோக்குடன் செய்யப்பட்ட சதித்திட்டத்தை முறியடிக்கும் நோக்கமாக திரு. அழகையா தாம் தெரிவு செய்யப்பட்ட பழைய சச்சமோட்டை வட்டாரத்தின் உறுப்பினராகவே தொடர்ந்தும்இருக்க முடிவுதெரிவித்ததால் திரு. துரையப்பா அடுத்த மாநகர தேர்தல் வரை காத்திருக்க நேர்ந்தது:

மாநகர தேர்தலிலும் போட்டியிட்டிருந்தால் தோல்வி நிச்சயம் என்பது திரு. துரையப்பாவுக்குதெரியாததல்ல. திரு. அழகையாவிடம் சூடு கண்டவராச்சே. சுமமாவிருப்பாரா. போட்டியின்றி தெரிவாக அவர் போட்ட நடப்பித்த கெடுபிடி நடவடிக்கைகள் வட்டார மக்கள் அறியாததல்ல. வேட்பாளர் சிவப்பிரகாசத்தின் வேட்புமனுவே மாயமாக மறைந்தது என்ருல்...!

புதிய அரசமைப்புத் திட்டத்தை எதிர்த்து யாழ் மாநகர சபை ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தைத்தானும் அரசுகுப்பைக் கூடைக்குள்போட்டு ஐ. நா. சாசனம் உறுதியளித்த ஜனநாயக அடிப்படை மனித உரிமைகளைத் தமிழ் மக்களுக்கு அரசியல் திட்டத்தில் உறுதியளிக்க மறுத்ததும் தெரிந்ததே! அத்தகைய ஓர் அடிமை சாசனத்தை இருகையேந்தி விழாவெடுத்துக்கொண்டவர்தான் இந்த ஆல்பிரட் (டி) துரையப்பா:

அதற்காக தமிழ் மக்கள் இவருக்கு நல்ல பாடம் புகட்டியிருந்தார்கள் 1972ல் இவர் நடத்திய 'யாழ் விஞேத களியாட்டு விழா'வின்போது அதன் வசூல் என்ன? ஏற்பட்ட நட்டம் இவ்வளவு என்பது பற்றிப் பேச்சு மூச்சு இல்லை.

அப்படிப்பட்ட ஆல்பிரட் (டி) துரையப்பா எடுக்கப் போகும் வெள்ளி விழாவுக்கோ? தமிழ்மக்கள் ஆதரவளிக்கப்போகிருர்கள்? இவரும் இவரது சபையும் 4வது அனைத்துலகதமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு அதன் ஆரம்ப ஏற்பாடுகளின்போது ஏற்படுத்திய நிர்ப்பந்தங்களையும் நடந்துகொண்ட அட்டாதுட்டித் தனத்தையும் பேராசிரியர் திரு. வித்தியானந்தனையும் விழா நிர்வாகிகளையும் எதிர்த்து வசைபாடி முன்னுக்குப்பின் முரண்பட விடுத்த அறிக்கைகளையும் தமிழுக்காக 7 உயிர்களைப் பலிகொடுத்த தமிழ் மக்கள் மறந்துவிட்டார்களா என்ன!

ஆகவே, வெள்ளிவிழா வெறும் கேலிக்கூத்தாகவே முடியுமென்பதே யாழ் நகர் மக்கள் அளிக்கப்போகும் முடிவு.

அறிந்தோ அறியாமலோ இவரது தகிடுதத்தங்களில் ஏற்கனவே சிக்கிக்கொண்டிருக்கும் நல்லவர்கள் யாவரும் தமது நற்பெயரைக் காப்பாற்றிக்கொள்ள வெள்ளிவிழா ஏற்பாடுகளில் சோரம் போகாதிருப்பார்களாக!

## 'முற்போக்கு வட்டத்துள் பிளவு? குமாரசூரியருக்குக் குழிபறிப்பு!!

சமீபத்தில் கொள்ளுப்பிட்டி தேயிலைப் பிரச்சாரச் சபை மண்டபத்தில் ''தமிழ் பொப் இசை — நேற்று — இன்று—நாளை'' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது; தபால் அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் ஒரு பார்வையாளராகக் கலந்து கொண்டதுடன் பொப் இசையின் தோற்றம் வளர்ச்சி முதலியவை பற்றி ஒரு ஆராய்ச்சிச் சொற்பொழிவும் நிகழ்த்திஞர்;

இதைத் தொடர்ந்து பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ''ஹரே பார்மர் ஹரே வேர்க்கர்'' என்ற பொப் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இதிலும் தபால் அமைச்சர் அழைக்கப்பட்ட கௌரவ விருந்தினராக அல்லாமல்பார்வையாளர்களுள் ஒருவராகக் கலந்துகொண்டு நிகழ்ச்சி முடிந்ததும், பங்குபற்றிய கலைஞர்களைப் பாராட்டி ஆசீர்வதித்தும் சென்ருராம்.

இவ்விரு நிகழ்ச்சிகளையும் சில ''முற்போக்காளர்கள்'' ஏற்பாடு செய்திருந்தனர். இதில் வேடிக்கை என்ன வென்ருல், இதே ''முற்போக்காளர்'' குழுவில் இயங்கும் ''சர்வாதிகாரக் கும்பலை''ச் சேர்ந்தவரும் சமீபத்தில் தொடங்கப்பெற்ற ஒருஇடது சாரி வார ஏட்டின் ஆசிரியருமான ஒருவர் இந் நிகழ்ச்சியினை பற்றி இவ்வார ஏட்டில் காரசாரமாகத் தாக்கியுள்ளதுதான்; அப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:—

சோஷலிசம் என்ற பெயரில் எமது நாட்டில் பலவிதமான நகைச்சுவை யூட்டும் சம்பவங்கள் நிகழ்கின்றன. அதேபோன்றுதொழிலாளர் விவசாயிகளின் பெயராலும் இப்படியான சுவையூட்டும் சம்பவங்கள் பெருந்தொகையாக நடக்கின்றன. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்று நடந்தது தான் சமீபத்தில் கொழும்பில் ஓர் பிரதான மண்டபத்தில் தொழிலாளர் விவசாயிகளின் பெயரில் நடைபெற்ற தமாஷா இவையாவும் நவீன சோஷலிசக் குஞ்சுகளின் மேற்பார்வையிலும் ஆசிர்வாதத்துடனுமே நடைபெற்றவை ஆகும். இவை எலலாம் 'பொப்' இசைக்குத் தேசிய மெருகூட்டும் நோக்கத்துடன் நடத்தப்பட்டனவாம். இந்தக்கண்ருவியை யாரிடம் சொல்வோம் ஹரே வேர்க்கர், ஹரே பார்மர்.''

அமைச்சர்குமாரசூரியரை ''நவீன சோசலிசக் குஞ்சு'' என்று பகிரங்கமாகத் தாக்குமளவிற்கு அந்த ஆசிரியருக்கு எப்படித் துணிவு ஏற்பட்டிருக்கும் என்பது பற்றி விசாரித்ததில், முதலாவித்துவத்துக்கு எதிராகப் போர் தொடுப்பதாகக் கூறிக் கொண்டு அமெரிக்காவில் குடியேறுவது பற்றி தன் 'சிந்தனைப்' போக்கைத் திசை திருப்பி உள்ளவரும், திரு. குமாரசூரியர் அமைச்சரானதும் தனது சாகச நடிப்பின் மூலம் அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமாகி அவரின் ஆலோசகர்களுள் ஒருவராக மாறிய ஒரு ''முற்போக்கு''க் கலாநிதி ''எடுத்துக் கொடுக்க'' அந்த ஆசிரியரும் அதை ''முடித்து'' விட்டு, இப்பொழுது அதுவும் தனக்கு ''25 ஆண்டு இலக்கிய சேவை ('வேடிக்கை') விழா'' எடுக்கும் நேரத்தில் வீண் வம்பை விலைக்கு வாங்கிவிட்டதாக விழிபிதுங்குவதாகத் தெரிகிறது. என்ன இருந்தாலும், ''தீட்டிய மரத்தில் கூர் பார்க்கும் முற்போக்காளர்கள், உண்மையில் முற்போக்காளர்கள்தான்! ஏனெனில் ''கூட இருந்து கொண்டே குழி பறிக்கும்'' கலையை அவர்கள் இன்னமும் கைவிட்டு விடவில்லை அல்லவா?

— ''ஊடுருவி''

### பலன்!

மலையை மரகதமாக்கி......
மக்களை வாழவைக்க......
வியர்வைசிந்தி
— அநுதினமும்
மாடாக உழைத்ததால்
நிலையின்றி, நிற்க
இடமின்றி......
நீர்கடந்து ... வாழப்
புறப்படுகின்றேன்.

### சுயநலம்!

நேற்றுமாலை என்னருகே
நின்று
என் தமிழே உயிர்மூச்
சென்று இயம்பி......
என்னினத்தை
அழிப்பவனை ...
இக்கணமே அழித்தொழிப்
பேன்......
என்றெல்லாம் மார்
தட்டியவன்
இன்றுகாலை என்னெதிரே
தமிழ்க்கொலை ஞ்ை .
நாடி...
அவன் காலை வருடி ......
ஏனே...முத்தமிடுகின்ருன்

— எஸ். கே எஸ் உதயன்

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.


இப்பொழுது காட்சியளிக்கிறது

செல்லமகால் வின்சர் (யாழ்நகர்)

# எம். ஜி. ஆர். - ஜெயலலிதா

நம்பியார், பாரதி, மனோகர், முத்தையா, பண்டரிபாய்

# அன்னமிட்ட

மற்றும் நாகேஷ் வி. கே. ராமசாமி

# கை

மற்றும் மனோரமா கீதாஞ்சலி

---

மே 3ம் திகதி முதல்

கெப்பிட்டல் (கொழும்பு)

மற்றும் திரைகளில்

எம். ஜி. ஆர்,
ஜெயலலிதா,
எம். என். நம்பியார்,
எஸ்.ஏ. அசோகன்,
நாகேஷ்,
மனோரமா, நடித்த



# ராமன்தேடிய சீதை

(ஈஸ்மன் கலர்)

7வது வாரம்

இங்ஸ்லி

முத்துராமன்,
ஜெயலலிதா,
நடித்தது.

# சூரிய காந்தி

---

சென்ரல் -(மருதானை) 2,6,9-30 (சனி, ஞாயிறு காலை 10 மணிக்கும்)

இரத்த பாசம் கொண்ட நான்கு சகோதரர்களைப் பற்றிய உள்ளத்தைத் தொடும் உணர்ச்சிபூர்வமான கதை. எங்கும் எல்லோரிடத்தும் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்ட குடும்பக் கதை.

இசை, கதை, நகைச்சுவை அனைத்தும் நிறைந்த அருமையான படம்.



ஜெய்சங்கர், ஏ. வி. எம். ராஜன், பிரமீளா, தேவிகா, சுந்தரராஜன், சோ, மனோரமா, நிர்மலா நடிக்கும்

ஜெயந்தி பிலிம்ஸ்

# அன்புச் சகோதரர்கள்

(இலவச பாஸ்கள் ரத்து)

விரக்தியேற்படாமல் தவிர்ப்பதற்காக வேளைக்கே தியேட்டருக்கு வாருங்கள்.


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு ... நாயக்கர் மாவத்தை 194 ஆம் இலக்கத்தில் 1974ம் வருடம் ஏப்ரல் மாதம் 28-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.